விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 20 செவ்வாய்க்கிழமை (05.08.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 229

# பிரபாகரனின் உறுதியை இந்தியா புரிந்து கொள்ளத் தவறிவிட்டது

## கேணல் ஹரிகரன் கருத்து





(புதுடில்லி)
தமிழீழத்தை அமைப்பதற்கான போராட்டத்துக்கு தலைமை தாங்கிய பிரபாகரனின் உறுதிப்பாட்டைப் புரிந்து கொள்ள இந்தியா தவறிவிட்டதாக இந்தியப் படைத்தரப்பின் முன்னாள் அதிகாரியான கேணல் ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குச் சென்ற இந்திய அமைதி காக்கும் படையினர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போரில் ஈடுபட்டமைக்கு அப்போதைய பிரதமர் ராஜிவ் காந்தி எடுத்த உணர்ச்சி வசப்பட்ட முடிவு மட்டுமன்றி, அவருக்கு உணர்ச்சி வசப்பட்டு ஆதரவளித்த முன்னாள் படைத

20 ஆம் பக்கம் பார்க்க....

# காணாமல் போனோர் தொடர்பான கூட்டத்தை கலைத்த பிக்குகள்

(யாழ்ப்பாணம்)
வட பகுதியில் காணாமல் போனோரின் உறவினர்கள் நேற்று கொழும்பில் நடத்திய கூட்டத்தை, பௌத்த பிக்குகள் சிலர் அச்சுறுத்தித் தடுத்து நிறுத்தியிருக்கின்றனர்.

நேற்று மாலை கொழும்பு மருதானையில் கத்தோலிக்க தேவாலயமொன்றில் இந்த கூட்டம் நடைபெற்றதாக கூட்டத்துக்கு ஏற்பாடுகளைச் செய்திருந்த அமைப்பாளர்களின் ஒருவரான அருட்தந்தை என்.சத்தியவேல் தெரிவித்தார்.

இத்தேவாலயத்துக்குள் பலவந்தமாக நுழைந்த பிக்குகள், வெளிநாட்டு சக்திகளுடன் சேர்ந்து நாடடுக்கு எதிராக சதி முயற்சிகளில் ஈடுபடவேண்டாம் என்று கூறி, அச்சுறுத்தியதாகவும் சத்தியவேல் கூறினார்.

19 ஆம் பக்கம் பார்க்க....

# ஜெயலலிதா அவதூறு குறித்து இலங்கை தூதரிடம் கண்டனம்

## நேரில் தெரிவிக்கப்படும் என்கிறார் சுஷ்மா

(கொழும்பு)
தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குறித்து இலங்கை பாதுகாப்புத் துறை அமைச்சக இணையத்தளத்தில் அவதூறு கட்டுரை வெளியிடப்பட்டதற்காக இலங்கை தூதர் நேரில் வரவழைக்கப்பட்டு, அவரிடம் முறைப்படி இந்தியாவின் கண்டனம் தெரிவிக்கப்படும் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவர்ராஜ் உறுதி அளித்துள்ளார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சு இணையத்தளத்தில் ஜெயலலிதா குறித்த அவதூறு கட்டுரை வெளியிட்டதற்கு இந்தியா கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

இது தொடர்பாக 19 ஆம் பக்கம் பார்க்க....

# செயலர்களை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே

## உச்ச நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

**(கொழும்பு) இலங்கையில் அரசுத்துறைச் செயலர்களை பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மட்டுமே உள்ளது என்று நாட்டின் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

வடமாகாண சபையின் தலைமைச் செயலர் விஜயலக்ஷ்மி ரமேஷ் தாக்கல் செய்திருந்த மனுவின் மீதே இந்தத் தீர்ப்பு வந்துள்ளது.

மாகாண முதலமைச்சர் சட்ட விரோதமான உத்தரவுகளைப் பிறப்பிப்பதாகவும், தன்னைப் பதவி நீக்க முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், அதைத் தடுக்க வேண்டும் என்று கோரியே மாகாண தலைமைச் செயலர் இந்த மனுவை உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

தலைமைச் செயலர் உட்பட அனைத்துச் செயலர்களையும் நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மடடுமே இருக்கிறது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள அதே வேளை, வட

19 ஆம் பக்கம் பார்க்க....


# இலங்கை துடுப்பாட்ட அணியை திருப்பி அனுப்பியது தமிழகம்

(சென்னை)
இலங்கையின் 15 வயதுக்கு உட்பட்ட துடுப்பாட்ட அணி சென்னையில் இருந்து நேற்று திங்கட்கிழமை கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரை இழிவுபடுத்தும் வகையில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட கட்டுரையைத் தொடர்ந்து, தமிழகத்தில் இலங்கைக்கு எதிரான உணர்வுகள் தீவிரமடைந்துள்ளன.

இதன் தொடர்ச்சியாகவே, தமிழகத்தில் ஜே.எம்.ஹரூன் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் கலந்து கொளளச சென்ற 15 வயதுக்குட்பட்ட இலங்கை அணியின் 16

19 ஆம் பக்கம் பார்க்க....




# வட மாகாண சபை விசேட அமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாண சபையின் விசேட அமர்வு இன்றைய தினம் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் கூடவுள்ளது.

காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகின்ற இவ்அமர்வில் நிதி, முத்திரை கைமாற்றல் நியதிச் சட்டம் ஆகியன சமர்ப்பிக்

19 ஆம் பக்கம் பார்க்க....

# வடக்கு மக்களின் நலன்களில் மத்திய அரசிற்கு அக்கறையில்லை

## அராஜகமாக நடந்துகொள்வதாக சி.வி குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)
தான் சொல்வதைத்தான் வடக்கு மாகாண மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற பாணியில் மத்திய அரசு செயற்பட்டு வருகின்றது என வடக்கு மாகாண முதலமைச்சரும, முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.


மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு செயற்பாட்டை இவ்வாறான எண்ணத்தின் பிரதிபலிப்பாகவே நாங்கள் கருதுகின்றோம் எனவும் அவர் பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

20 ஆம் பக்கம் பார்க்க....

■ கனடா 3 வருட விசா முற்பணம் எதுவும் இல்லை. படிமுறைகளின்படி கொடுப்பனவு.
■ சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, இத்தாலி 100% விசா வெல்லப்படும் உறுதிப்பாட்டுடன் முதன்முறையாக செங்கென் விசா ஆலோசனை.
■ சைப்பிரஸ் ஐரோப்பிய நாடு 6 மாதம் படித்தால் கனடா பறக்கலாம். மாதம் பகுதிநேரம் 1 இலட்சம் வரை சம்பாதிக்கலாம். IELTS தேவையில்லை.
■ நியூசிலாந்தில் படிக்க IELTS தேவையில்லை. 2 வருடத்தில் ஆஸி பறக்கலாம்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(7216) தொலைபேசி 0212219016, 0215689090






இலங்கையின் அதிகாரபூர்வ பாதுகாப்புத் துறை இணையத்தளத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைப் பற்றி அவதூறான செய்தி வெளியானதைக் கண்டித்து நேற்று திரையுலகினர் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்திற்கு எதிரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தனின் ஆலய சூழலில் புனிதத் தன்மையைப் பேணுங்கள்



## நல்லூர்க் கந்தன் அடியார்கள் கோரிக்கை

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் உற்சவ காலங்களில் வெளிவீதியில் பக்தர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் புனிதத் தன்மையை குலைக்கும் வகையிலும் செயற்படக்கூடாதென நல்லூர் முருகன் அடியார்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

நல்லூர்க்கந்தசுவாமிகோவில்உற்சவகாலம் ஆரம்பமாகி நடைபெற்றுவரும் வேளையில் பக்தர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் ஆலயத்தின் புனிதத் தன்மைக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையிலும் ஆலய வெளி வீதிகளில் பதாகைகள் கட்டப்படுவது மற்றும் ஒளிப்படக் காட்சிகளை ஒளிபரப்புவது போன்றவற்றை முற்றாகத் தவிர்த்து ஆலயச் சூழலில் புனிதத் தன்மையையும் அமைதியையும் பேண வழிசெய்யுமாறும் அடியார்கள் கேட்டுள்ளனர்.

சுவாமி வெளிவீதி உலா வரும் போது இறைவனை சிந்தித்து மனமுருகி வரும் பக்தர்களுக்கு இவ்வாறான நடவடிக்கைகள் கவனக் கலைப்பை ஏற்படுத்துவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

அத்துடன் கடந்த சில வருடங்களாக இரதோற்சவ நிகழ்விற்கு உலங்கு வானூர்தி மூலம் பூச்சொரியும் நிகழ்வும் இவ்வருடம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

எனவே, ஆலயச் சூழலில் புனிதத் தன்மையைப் பேணி அடியார்கள் தடையின்றி கந்தப் பெருமானைத் தரிசிக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறும் முருக பக்தர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ந)

# தாக்குதலுக்குள்ளான தமிழ் மாணவன் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதியில் நேற்று முன்தினம் அதிகாலை தாக்குதலுக்கு உள்ளான மாணவருக்கு பலாங்கொட வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு அவர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் பீ.உடவத்த தெரிவித்துள்ளார்.

சமூக விஞ்ஞானம் மற்றும் மொழிகள் பீடத்தில் முதலாம் ஆண்டில் பயிலும் தமிழ் மாணவர் ஒருவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானார்.

இது தொடர்பாக பலாங்கொட பொலிஸார விசாரணைகளை நடத்தி வருவதுடன் விசாரணைகளின் அடிப்படையில் மாணவர்கள் இடையில் ஏற்பட்ட மோதலே சம்பவத்திற்கு காரணம் என தெரியவந்துள்ளதாகவும் இந்த சம்பவம் இனவாத அடிப்படையிலானது அல்ல எனவும் உபவேந்தர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்தின் விடுதிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், வெளியில் இருந்து வந்து தாக்குதல் நடத்தினார்கள் என்பதை எந்த விதத்திலும் நம்ப முடியாது.

பல்கலைக்கழகத்தில் 500 மாணவர்கள் தற்போது பயின்று வருகின்றனர். சமூக விஞ்ஞானம் மற்றும் மொழிகள் பீடத்தில் 10 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

கடந்த 18 வருடங்களாக தமிழ்,சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் ஒன்றாக கல்வி கற்று வருவதுடன் அவர்கள் மத்தியில் எவ்விதமான இனவாத மோதல்களும் இல்லை எனவும், உபவேந்தர் உடவத்த சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் தமிழ் மாணவர் மீதான தாக்குதுலுக்கு மாணவர்கள் இடையிலான மோதல் காரணமல்ல எனவும் பல்கலைக் கழகத்திற்கு வெளியில் இருந்து வந்தவர்கள் இந்த தாக்குதலை நடத்தியிருப்பதாகவும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மாணவர் குழுவின் பிரதிநிதி ரசிது ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

சிலரது அரசியல் நோக்கங்களுக்காக இந்த தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் அதனை வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (செ-11)

# ஷிராணியின் வங்கிக் கணக்கை விசாரணை செய்ய அனுமதி

## கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் தேசிய அபிவிருத்தி வங்கி கணக்கு விபரங்கள் குறித்து விசாரணை நடத்த, கொழும்பு மேல் நீதிமன்றம் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் வங்கி கணக்கு விபரங்களை அறிய நடத்தும் விசாரணைகளுக்கு தடை விதிக்க கோரி, தேசிய அபிவிருத்தி வங்கி தாக்கல் செய்திருந்த மனுவை தள்ளுபடி செய்து, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய அபிவிருத்தி வங்கியில் உள்ள முன்னாள் பிரதம நீதியரசரின் வங்கி கணக்குகள் தொடர்பில் அணுகி விசாரணைகளை நடத்த நீதிமன்றம் ஏற்கெனவே குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அனுமதி வழங்கியிருந்தது.

எனினும் வங்கி, மேல் நீதிமன்றத்தின் அந்த உத்தரவை சவாலுக்கு உட்படுத்தியிருந்ததுடன் தடையுத்தரவு கோரியிருந்தது.

தேசிய அபிவிருத்தி வங்கியில் உள்ள முன்னாள் பிரதம நீதியரசரின் 10110002058 (பழைய இலக்கம் 100000200136O) வங்கி கணக்கு குறித்து விசாரணை நடத்தப்படும் என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் 43 வது பிரதம நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்க நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை மூலம் 2013 ஆம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதி முறைகேடுகள், அனைத்து வழக்குகளில் தலையிடும் குற்றச்சாட்டுக்கள் உட்பட தம்மீது சுமத்தப்பட்டுள்ள சகல குற்றச்சாட்டுக்களையும் அவர் மறுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

வீடு கட்டுதல், வீடு திருத்தம், வயறிங், பெயின்ரிங், மாபிள் பதித்தல், அலுமினிய பிற்றிங் வேலைகள் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு :0770783482
(7214)

## வில்லிசை நிகழ்வு

கைதடி வடக்கு வாலாம்பிகை அம்பாள் ஆலயத்தில் இன்று (05.08.2014) செவ்வாய்க்கிழமை இரவு சிறுப்பிட்டியூர் "இசை ஞானச்சக்கரவர்த்தி" க.சத்தியதாஸ் வில்லிசைக் குழுவினரின் வில்லிசை இடம்பெறும். (7213)

## பெண்கள் பாடசாலைகளுக்குள் நுழைந்த

# நாமல் ராஜபக்ஷவின் செயல் அருவருக்கத்தக்கது - ஐ.தே.க

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பாடகர் இராஜ் வீரரத்ன ஆகியோரின் செயல் அருவருக்கத்தக்கது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பாடகர் இராஜ் வீரரத்ன ஆகியோர் கொழும்பில் உள்ள பெண்கள் பாடசாலைகள் சிலவற்றுக்கு சென்று நகர் ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பாடகர் தனது பாடலுக்கான இசையை கையடக்க தொலைபேசி மூலம் ஒலிபரப்பி பாடியுள்ளார்.

பாடலில் அடங்கியுள்ள வார்த்தைகளான எனது ஸ்வீட் மெனிகா உம்மா தருங்கள் என்ற வரிகளை மாணவிகள் முன்னால் பாடியது அருவருக்கத்தக்கது.

பாடசாலைகளில் உள்ள நூலகங்களுக்கு புத்தகங்களை அன்பளிப்பு செய்ய அக்கறை காட்டுபவர்கள் மற்றும் நாடகங்களை நடத்துபவர்கள் கூட பாடசாலைகளுக்குள் செல்வதற்கு கல்வியமைச்சின் அனுமதியை பெற வேண்டியது அவசியம்.

பாடசாலைகளின் ஒழுக்கத்தை பாதுகாக்கவே இந்த சட்டத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழ்நிலையில், கொழும்பில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலைகளுக்குள் பாடகருடன் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சென்றமையானது பாடசாலையின் ஒழுக்கத்தை மீறும் செயல்.

இதற்கு இடமளித்த பாடசாலைகளின் அதிபர்களின் நடவடிக்கைகளை கண்டிக்கின்றோம்.

இந்த நகர் ஊக்குவிப்பு வேலைத்திட்டம் நடைபெற்ற பாடசாலைகளின் பெயர் பலகைகளை ஒளிப்பதிவு செய்ய ஊடகவியலாளர்களுக்கு பாடசாலை அதிகாரிகள் அனுமதி வழங்காது அவர்கள் திட்டியுள்ளனர். இதனையும் நாங்கள் கண்டிக்கின்றோம் எனவும அகில விராஜ் காரியவசம் கூறியுள்ளார். (செ-11)

# இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 18 இந்திய மீனவர்கள் விளக்க மறியிலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்ப்படுத்தப்பட்ட இந்திய மீனவர்கள் எதிர்வரும் 12-ம் திகதி வரை விளக்க மறியில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஊர்காவற்றுறைக்கு வடக்கில் மீன்பிடியில ஈடுபட்டிருந்த போது இந்த இந்திய மீனவர்கள் கடந்த யூலை மாதம் 22-ம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் தமிழகத்தின் நாகப்பட்டினம் பிரதேசத்தை சேர்ந்த மீனவர்கள் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (செ-11)

# விபத்தில் சிக்கிய பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வாகன விபத்தில் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்ப பெண்ணொருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் நள்ளிரவு உயிரிழந்துள்ளார்.

யாழ்.துன்னாலை கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த விஜயகுமார் சந்திரா(வயது-47) என்ற நான்கு பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 6 ஆம் மாதம் 27 ஆம் திகதி நெல்லியடிப்பகுதியில் தனது மகனுடன் துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்தவேளை பின்னால் வந்த ஹன்ரர் வாகனம் மோதித் தள்ளியுள்ளது.இந்நிலையில் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த தாயும் மகனும் மயக்கமடைந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இதன்பின்னர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இங்கு 15 நாட்கள் சிகிச்சை பெற்றுவந்த குறித்த குடும்பப் பெண் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.. பின்னர் மீண்டும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில் சிகிச்சைபலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இவரது மரணம் தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணையதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணைக்குழு முன் சாட்சியமளிக்கத் தயார்

## காணாமற் போனவர்களின் பெற்றோர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கத் தயார் என காணாமற் போனவர்களின் பெற்றோர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பில் விசாரணை நடத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை விசாரணைக் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இந்த விசாரணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்க ஆயத்த நிலையில் இருப்பதாக காணாமற் போனவர்களின் பெற்றோர் ஒன்றியம் அறிவித்துள்ளது.



காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஆவணங்கள், சாட்சியங்கள் உள்ளிட்ட அனைத்து தகவல்களையும் ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவிற்கு வழங்கத் தயார் என அந்த ஒன்றியத்தின் அழைப்பாளர் ஆனந்த ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

தேவையான சாட்சியங்களை திரட்டும் நோக்கில் வடக்கு கிழக்கில் ஏற்கனவே நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடொன்றில் விசாரணைக் குழுவின் பிரதிநிதிகளை சந்திக்க தாம் ஆயத்தமாகி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளிப்போரை தண்டிக்கப் போவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## போதையில் சாகசம் செய்த இரு இளைஞர்கள் கைதாகினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மது போதையில் வாகனங்களை செலுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் இதனால் அதிகளவான விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ள பொலிஸார், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படுபவர்கள் கைது செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் மது போதையில் மோட்டார் சைக்கிளை செலுத்திய இரு இளைஞர்களை நெல்லியடிப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

குறித்த இளைஞர்கள்மதுபோதையில் நெல்லியடி நகரப்பகுதியில் அட்டகாசம் செய்ததாகவும் இதன் காரணமாக குறித்த இளைஞர்களை பொலிஸார் கைது செய்ததாகவும் தெரிவித்தனர்.

இதே வேளை எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (6-60)

# விசேடதேவையுடையோருக்கான வாழ்வாதார உதவிகள் வழுங்கல்



(யாழ்ப்பாணம்)

விசேடதேவையுடையோருக்கான வாழ்வாதார உதவி வழுங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் வலி. மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் கடந்த 30 ஆம் திகதி புதன் கிழமை பிரதேச சபைத் தவிசாளர் திருமதி. நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் வலி. மேற்கு பிரதேசத்தைச் சேர்ந்தவரும் நோர்வே நாட்டின் சிறுபான்மை இனத்தவரின் ஆலோசகருமான அன்புமலர் இராஜசிங்கம் கலந்து கொண்டு 50 இற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு உதவிகளை வழுங்கினார்.

இலங்கையில் சுனாமி அனர்த்தம் இடம்பெற்ற போது நோர்வே நாட்டின் வாயிலாக பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களுக்கும் பல்வேறு உதவிகளை வங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மேற்படி கூட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சுயதொழில் உதவித் திட்டம் வங்குவது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது. (6)


## 1 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்

மண்ணுலகில் 08 05 1958



விண்ணுலகில் 16 08 2013

அமரர் வயிரன் தியாகராசா
(கல்வி உத்தியோகத்தர், பிரதேச சபை உறுப்பினர், வர்த்தக சங்க தலைவர் - பளை)
திதி:-தசமி

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் ஆறிவிடவில்லை எம் துயரம்
அன்பின் திருவுருவாய் பாசத்தின் அரவணைப்பாய்
அமைதியின் உறைவிடமாய் அவனியில் வாழ்ந்து
எமக்கு நல்வழிகாட்டிய எம் அருமை சகோதரனே
எம் உள்ளங்கள் என்றென்றும் உம் நினைவுகளுடன்...
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இடைக்குறிச்சி,
வரணி. (சி-8109) சகோதரர்கள்


## இன்றைய இராசி பலன்

05.08.2014
(ஆடி 20, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
நவமி பிற்பகல் 12.38 மணிவரை
விசாகம் முற்பகல் 7.15 மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை
சுபநேரம் 10.34-12.04 மணிவரை
மூன்றாம் ஆடிச்செவ்வாய்

வளவன்

**மேடம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம்.

**இடபம்:** சந்தித்த நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரும், கௌரவமான நாள்.

**மிதுனம்:** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் பெறுவீர்கள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் குறையும்.

**கடகம்:** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், கல்வி நலன்கருதி ஒரு தொகையை செலவு செய்வீர்கள்.

**சிம்மம்:** தாயின் உடல் நலம் சீராகும், தொழிலில் ஆர்வத்துடன் செயற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் தீரும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், அந்நியர் சந்திப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**துலாம்:** உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், விலையுயர்ந்த பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும், [illegible]நட்புண்டு, வார்த்தைகளில் நிதானம் தேவை.

**விருச்சிகம்:** பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், ஆழ்ந்த சிந்தையுண்டு, [illegible] பர்கள் உதவியுண்டு.

**தனுசு:** தொழில் நலன்கருதி பயண[illegible]மொன்றை மேற்கொள்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், உணர்ச்சிவசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, செலவுகள் அதிகரிக்கும்.

**மகரம்:** குடும்பத்தில் மறக்க முடியாத இனிய சம்பவமொன்று நடைபெறலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்:** எதிர்கால முன்னேற்றம் கருதி புதிய திட்டம் ஒன்றைத் தீட்டுவீர்கள், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மீனம்:** உடல் உழைப்பில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பால் சாதித்துக் காட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயை தாக்கிய தனயன்களை மறியலில் வைக்குமாறு பணிப்பு

(கரணவாய்)

யாழ்ப்பாணம் மண்டான் கரணவாய் மேற்கு கரவெட்டி பகுதியில் இரு மகன்களால் தாக்கப்பட்ட தாயொருவர் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

5 பிள்ளைகளின் தாயாண குறித்த குடும்பப் பெண் அவரது 13 வயது மற்றும் 22 வயதுடைய மகன்களால் கடந்த முதலாம் திகதி கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இதனால் குறித்த பெண் நெல்லியடி பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்து விட்டு மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சென்றுள்ளார்.

இதனையடுத்து தாக்குதல் நடத்திய அவரது இருமகன்களையும் நெல்லியடிப் பொலிஸார் கைது செய்ததுடன் அவ்விருவரையும் யாழ். சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இந்நிலையில் 22 வயதுடைய இளைஞரை யாழ்.சிறைச்சாலையிலும் 13 வயதுடைய சிறுவனை அச்சுவேலி அரசினர் சிறுவர் பராமரிப்பு நிலையத்திலும் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை வைக்குமாறு யாழ்.சிறுவர் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் சம்பவம் யாழ்ப்பாணத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள அதேவேளை அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (6-60)




# மாணவன் மீதான தாக்குதலுக்கு யாழ்.பல்கலை சமூகம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவன் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவரொருவர் நேற்று முன்தினம் அதிகாலை இரண்டு மணியளவில் முகமூடி அணிந்தவர்களால் தாக்கப்பட்டிருந்தார்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவன் முகமாலைப் பகுதியைச் சேர்ந்த சந்திரகுமார் சுதர்சன் (வயது 20) என இனங்காணப்பட்டிருந்தார்.

இவரைத்தவிர சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கின்ற தமிழ் மாணவர்கள் 10 பேருக்கும் உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ் மாணவர்களை விடுதலைப் புலிகள் என சித்திரித்தும் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்தன.

தாக்குதலில் படுகாயமடைந்துள்ள தமிழ்மாணவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அம்மாணவனை பார்வையிட பல்கலைக்கழக நிர்வாகம் எதிர்ப்புத் தெரிவித்திருந்த நிலையில் மாணவர்கள் நிர்வாகத்தினரின் செயலுக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் நேற்றையதினம் நடைபெற்ற பரீட்சையையும் புறக்கணித்தனர்.

இந்நிலையில் சப்ரகமுவவில் தமிழ்மாணவன்மீது மேற்கொள்ளப்பட்ட கொலைவெறித்தாக்குதலுக்கும் தமிழ் மாணவர்கள் மீது விடுதலைப்புலிகள் இயக்க சாயம் பூசுவதற்கும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், ஆசிரியர் சங்கம் கடும் கண்டனத்தை நேற்று வெளியிட்டுள்ளது.

தமிழ் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்படுகின்ற தொடர் வன்முறைகள் தமிழ்மாணவர்களை சீண்டிப்பார்க்கும் செயலெனவும் தமிழ் மாணவர்களின் கல்வியை சீரழிக்கும் செயற்பாடு எனவும் அவை தெரிவித்துள்ளன.

தொடர் வன்முறைகளால் மாணவர்கள் வேறு வழியை தேர்ந்தெடுத்து விடுவர். அதனால், கடந்தகால அழிவுகள் மீண்டும் ஏற்பட்டுவிடும் எனவும் எச்சரித்துள்ளன.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் தமிழ் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காட்டத் தொடங்கியுள்ள நிலையில் அவர்கள் வெளிமாவட்ட பல்கலைக்கழகங்களுக்கு சென்று தமது கற்கை நெறிகளை தொடங்குவதற்கும் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் மூலம் தடைவிதிப்பதற்கும் சுய சக்திகள் முயன்று வருகின்றன எனக் கண்டனம் தெரிவித்துள்ளன.

தமிழ்மாணவன் மீது கொலைவெறித்தாக்குதல் மேற்கொண்டவர்களை உடனடியாகக் கைது செய்து உரிய சட்ட நடவடிக்கையெடுக்குமாறும் அவை கோரிக்கை விடுத்துள்ளன.

மேலும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ்மாணவன்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு வெளியாரின் தலையீடும் காரணமாக இருக்கலாம் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சந்தேகம் வெளியிட்டுள்ளது. (6-4)

# செயலமர்வு

(தும்பளை)

யாழ்ப்பாணம் சுண்டிக்குளத்தில் அமைந்துள்ள British council நிறுவனத்தினதும் நூலகத்தினதும் ஆசிரிய நிலையத்தினதும் தேவைகள் பற்றிய செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த செயலமர்விற்கு British council நிறுவன பிரதி நூலக முகாமையாளர் பூசணி சியாமளன், வாடிக்கையாளர் சேவை பொறுப்பதிகாரி செல்வி. ரஜிதா செல்வராசா, நூலக தகவல் உத்தியோகத்தர் அடில்லா-திருக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (6-19)








யாழ்.கல்வி வலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட பாடசாலைக்கிடையிலான தொழில்நுட்ப பாடங்களுக்கான போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ். கல்வி வலய கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இதன்போது வெற்றியீட்டிய மாணவிக்கு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் சான்றிதழ் வழங்குவதையும் அருகில் கல்வி உயர் அதிகாரிகள் நிற்பதையும் வெற்றியீட்டிய மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

# மாணவன் தாக்கப்பட்டமை குறித்து உரிய விசாரணை வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

பல்கலைக்கழக மாணவன் தாக்கப்பட்டதற்கு உரிய விசாரணை வேண்டும் எனவும் ஏனைய மாணவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி திசாநாயக்க ஆகியோரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

பல்கலை. வளாகத்துக்குள் இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்துவது மாணவர்களின் பாதுகாப்பை கேள்விக்குட்படுத்தியுள்ளது. சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் கிளிநொச்சி முகமாலையைச் சேர்ந்த சந்திரகுமார் சுதர்சன் எனும் முதலாம் ஆண்டு மாணவன் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

இனந்தெரியாதவர்கள் என்று கூறப்படுகின்ற இருவரினால் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் தமிழ், முஸ்லிம் மாணவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான துண்டுப் பிரசுரமும் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இவ்வாறான சம்பவங்கள் அனைத்து இலங்கை மக்களினதும் ஐக்கியத்துக்காக பாடுபடும் எமது முயற்சிகளை கேள்விக்குட்படுத்தும். எனவே இவ்வாறான தாக்குதல் சம்பவங்களை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க விசேட செயற்றிட்டத்தினைத் தயாரித்து ஆரம்பத்திலேயே தடுத்து நிறுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளேன்.

மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமாக உடனடியாக செயற்படுகின்றபோதே பாதுகாப்பான சூழலில் எமது மாணவச் செல்வங்கள் தமது கல்வியை தொடர முடியும். தூரப் பகுதிகளிலிருந்து உயர் கல்வியைத் தொடர்வதற்காக பல்கலைக் கழகங்களுக்கு பிள்ளைகளை அனுப்பி வைக்கும் பெற்றோர் இவ்வாறான தாக்குதல்களால் மிகுந்த வேதனையும் பதற்றமும் அடைந்துள்ளனர்.

எனவே பல்கலைக்கழகங்களுக்குள் நடைபெறும் இவ்வாறான அநாகரிகமான தாக்குதல்கள் மாணவர்களின் கல்வியையும் இனங்களுக்கிடையேயான ஐக்கியத்தையும் பாதிக்கச் செய்துவிடும்.

எனவே சப்ரகமுவ பல்கலையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தோடு தொடர்புடையவர்கள் அடையாளம் காணப்படுவதோடு உரிய தண்டனையையும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து வெளி இடங்களில் இருந்து வருகை தந்து கல்வி பயிலும் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பாதுகாப்புத் தொடர்பான அச்சத்தை அகற்றவேண்டும் எனும் கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடமும் விடுத்துள்ளேன் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவன் கடத்தலின் எதிரொலி சிம் அட்டைகள் பதிவு தீவிரம்

இலங்கையில் உள்ள கையடக்க தொலைபேசி நிறுவனங்கள் வழங்கியுள்ள சகல சிம் அட்டைகளும் இந்த வருட இறுதிக்குள் பதிவு செய்யப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தொலைத் தொடர்புகளை ஒழுங்குப் படுத்தும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது 21 மில்லியனுக்கு மேற்பட்ட கையடக்கத் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டிருப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் அனுஷ பெல்பிட தெரிவித்துள்ளார்.

புதிதாக வழங்கப்படும் சிம் அட்டைகள் மூன்று நாட்களுக்கு பதிவு செய்யப்பட வேண்டியது கட்டாயம். இதற்கு முன்னர் வழங்கப்பட்ட பெருந்தொகையான சிம் அட்டைகள் பதிவு செய்யப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

கல்கமுவ - மீகலேவ பிரதேசத்தில் சிறுவன் கடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்தே சிம் அட்டைகளை பதிவு செய்ய வேண்டும் என்ற யோசனைகள் மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் இது குறித்து தகவல் வெளியிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன,சிறுவனை கடத்திச் சென்றவர்களிடம் 7 சிம் அட்டைகள் இருந்துள்ளன. அவர்கள் இரண்டு சிம் அட்டைகளை பிரதானமாக பயன்படுத்தி வந்துள்ளனர்.

7 சிம் அட்டைகளில் ஒன்று கொழும்பில் மூட்டை தூக்கும் தொழிலில் ஈடுபடும் ஒருவரின் பெயரில் இருக்கின்றது.

குருணாகலில் இருக்கும் தொலைபேசி நிறுவனம் ஒன்றின் முகவர்கள் எந்த அடையாள அட்டைகளையும் பெறாது சிம் அட்டைகளை விநியோகித்து வருகின்றனர்.

எவராவது சிம் அட்டையை கொள்வனவு செய்ய வரும் போது அவர்களிடம் அடையாள அட்டை இல்லையென்றால், முன்னர் வாங்கியவர்களின் அடையாள அட்டையை பயன்படுத்தி அந்த முகவர் நிறுவனம் சிம் அட்டைகளை வழங்கியுள்ளது.

இது குறித்து விசாரணை நடத்தி வருகிறோம். கடத்தலுக்கு உதவிய குற்றச்சாட்டின் பேரில் சிம் அட்டைகளை விற்ற நபர்களை கைது செய்வோம் என பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (6)

## மணலுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். வல்லை வீதி வழியாக அனு மதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்திலும் கன்டர் ரக வாகனத்திலும் மணல் கொண்டு சென்றதாகக் கூறப்படும் இருவரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்ததாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

கோவில் ஒன்றின் வெளிவீதிக்கு மணல் போடுவதற்காக வல்லைப் பகுதியிலுள்ள தரிசு நிலத்திலிருந்து அனுமதியின்றி மண் வெட்டிச் சென்றுகொண்டிருந்தபோது, ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரையும் அச்சுவேலியைச் சேர்ந்த 21 வயதுடைய ஒருவரையும் கைது செய்ததாகவும் பொலிஸார் கூறினர்.

இவர்களின் வாகனங்கள் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டன. (6)

## மஹோற்சவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வேரவில் பூநகரி அருள்மிகு வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் ஆலய மஹோற்சவம் இன்று செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் இடம்பெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (6)

## அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

### கேள்வி அறிவித்தல்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்ட செயலரால் கீழ் குறிப்பிடப்படும் நிர்மாண வேலைகளுக்கான தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1.விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2. தகைமைகள் பற்றிய் தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ள டக்கப்பட்டுள்ளது.

3.ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 05.08.2014 ஆம் திகதி தொடக்கம் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மாவட்ட உதவிப் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (தொலை பேசி இல. 021 222 1676) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

4.விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 05.08.2014 முதல் 25.08.2014 ஆம் திகதி வரை காலை 9 மணியிலிருந்து மாலை 3 வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/- கட்டணமாக செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

5.மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 26.08.2014 ஆம் திகதியன்று நண்பகல் 12.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அனர்த்த முகாமைத்துவ இணைப்பு அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட விலைக் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி தாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபால் உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக் கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 26.08.2014 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு திறக்கப்படும்.

6. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச் சபையின் இறுதி தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

7 கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைக் கூறல் பிணையானது கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்வி பிணைப் பொறுப்பு 120 நாட்கள் இலக்கம் இடப்பட்டும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல. | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை (ரூ) | மீளளிக்கப் படாத தொகை (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| JF/GA/DDMCU/DMRP/2014/02 | பருத்தித்துறை சின்னத் தோட்டம் பகுதியில் வடிகாலமைப்பு நிர்மாணித்தல் | 5.72 | 06 | C7 | 57,200.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/DMRP/2014/04 | வேலணை சின்னமடு மேற்குப்பகுதியில் வடிகாலமைப்பு நிர்மாணித்தல் | 8.744 | 06 | C7 | 87,500.00 | 1000.00 |
| JF/GA/DDMCU/DMRP/2014/07 | ஊர்காவற்றுறை நாரந்தனைப் பகுதியில் உவர் நீர் உட்புகுதலில் இருந்து பாதுகாப்பதற்கான தடுப்பணை அமைத்தல் | 3.02 | 06 | C8 | 34,000.00 | 1000.00 |

சுந்தரம் அருமைநாயகம்
அர்சாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி-8112)


## கணித பாட பிரத்தியேக வகுப்பு

**O/L** மாணவர்களுக்கான
கணிதபாட மீட்டல் வகுப்புக்கள்
யாழ்.நகரை அண்மித்த பிரதேசங்களில்
வீடு வந்து கற்பிக்கப்படும்.
கடந்த கால 10 வருட
வினாப் பத்திரங்களும் செய்து விடப்படும்.
தொடர்பு 0774598339

(7208)



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 2
கி.பா: 41 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc /லண்டனில் வேலை (Business Visa)
தொ.இ: B/3459

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 20 செவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: விஞ்ஞானப் பட்டதாரி /ஆசிரியர்
தொ.இ: B/3461

பிறப்பு: 1966 இந்து
நட்சத்திரம்: அனுசம் 2
கி.பா: 33 ¼ உயரம்: 5'5"
தகைமை/தொழில்: நவீல்ஸ் பாடசாலை/தையுல்
எதிர்பார்ப்பு: வாய்பேச முடியாதவர்
தொ.இ: B/3463

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: ரோகினி 3
கி.பா: 35 செவ் 1 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: A/L, Dip. in English / முகாமையாளர் (கனடா)
தொ.இ: B/3466

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 1
கி.பா: 29 செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: GAQ /நூலகர்
தொ.இ: G/2384

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 26 ½
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc /ஆசிரியர்
தொ.இ: G/2385

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அத்தம் 3
கி.பா: 21 செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BDM, ABF / IT Production Executive
தொ.இ: G/2389

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 85 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L, NCAT, BA – Following / உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்
தொ.இ: G/2392

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பிரச்சினைக்கான தீர்வு கரையோர மாவட்டங்கள் அல்ல

(கொழும்பு)

முஸ்லிம்களின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு கரையோர மாவட்டங்கள் அல்ல என ஊக்குவிப்பு உற்பத்தி திறன் விருத்தி அமைச்சர் பசீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

அமைச்சர் பசீர் சேகுதாவூத் எழுதிய "சோர்விலாச் சொல்" நூல் வெளியீட்டு விழா கொழும்பு, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில் ஏற்புரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"கரையோர மாவட்டம் என்பது அம்பாறை மாவட்ட முஸ்லிம்களின் பிரச்சினையாகும். கரையோர மாவட்டம் முஸ்லிம்களின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாகாது.

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியில் இருக்க வேண்டும். இதற்காக எனது அமைச்சுப் பதவியையும் இராஜினாமாச் செய்ய ஆயத்தமாக உள்ளேன்.

நான் ஏற்கனவே எனது பிரதியமைச்சுப் பதவிகளை மூன்று தடவைகள் இராஜினாமாச் செய்துள்ளேன்.

ஆனால், தற்போது எனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்து தலைவர் ரவூப் ஹக்கீமை சங்கடத்துக்குள் கொண்டுவர விரும்பவில்லை.

எனது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் எனக்கு மூன்று முறை தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை தந்துள்ளார்.

இவற்றையெல்லாம் நான் மறந்து விடவில்லை. தற்போதைய சூழ்நிலையில் அரசிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சி அரசியலை நடத்திப் பார்க்க வேண்டும். காலம் கடத்துவதை விட இப்போதே இதைச் செய்வதையே நான் விரும்புகின்றேன்.

நான் கருத்துச் சொல்வதில் பின்நிற்கப் போவதில்லை. அரசுக்கு ஒரு செய்தி சொல்ல வேண்டுமானால் அதற்குரிய நல்ல தருணம் இதுதான்.

தேர்தல் வந்த பின்னர் அதைச் செயய முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (6)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள கொழும்புத்துறை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

வளர்ப்பு நாய்களுக்கு உரிமைக் கட்டணமாக 20 ரூபா செலுத்தப்பட வேண்டும். இதற்கமைய இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை ஏ.வி.வீதி சென்மேரிஸ் தேவாலயத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை இலந்தைக்குளம் வீதி புளியடியிலும் நாளை புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை பாசையூர் சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை புதுக்குடியிருப்பு பாசையூரிலும் மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை பாசையூர் மகப்பேற்று நிலையத்திலும் முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை ஈச்சமோட்டை சனசமூக நிலையத்திலும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை பாற்குளம் சனசமூக நிலையம் கொய்யாத் தோட்டத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையத்திலும் வைத்து தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (6)

# ஒரே சின்னத்தில் முஸ்லிம்கள் போட்டி

எதிர்வரும் ஊவாமாகாண சபைத் தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிடுவது குறித்து கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிடுவது குறித்து ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அகில இலங்கை மக்கள் காங்கிரசுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து போட்டியிடும் என கட்சி உள்வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் றிசாத் பதியுதீனின் கட்சியும், ரவூப் ஹக்கீமின் கட்சியும் கூட்டாக இணைந்து தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊவா மாகாணசபையில் போட்டியிடுவது குறித்த ஒழுங்குகளை செய்யும் நோக்கில் அமைச்சர் ஹக்கீம் கடந்த மாதம் பல தடவைகள் பதுளைக்கு விஜயம் செய்துள்ளார்.

முஸ்லிம் மக்களை சந்தித்து தேர்தலில் போட்டியிடுவது குறித்த ஏற்பாடுகளை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலையக முஸ்லிம் பேரவை போன்ற கட்சிகளும் இந்தக் கூட்டணிக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன எனக் குறிப்பிடப்படுகிறது. (6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 80 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 40 | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 400 |
| தக்காளி | 80 | 80 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 50 |
| கோவா | 100 | 100 | 100 | 100 |
| கரட் | 120 | 140 | 120 | 140 |
| பூசணி | 35 | 50 | 40 | 50 |
| புடோல் | 40 | 50 | 40 | 60 |
| வாழைக்காய் | 70 | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 60 | 80 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 60 |
| லீக்ஸ் | 70 | 80 | 70 | 80 |
| பீற்றூட் | 70 | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 100 | 150 | 150 | 140 |
| முருங்கைக்காய் | 30 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 100 | 100 | 80 | 120 |
| கத்தரிதும்புள்ள | 30 | 50 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 40 | 60 | 50 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 20 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 | 100 |

# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 96

டோறின் மன்மதநாயகம்




நான் எடுக்கும் முடிவு சரியா என்று எனக்கு தெரியாது. ஆனால் எடுத்த முடிவை சரியாக்குவேன்.

மாவீரன்
அலெக்ஸ்சாண்டர்

டிசா டிலா விபூ வித்தி குகன்




றொனால்ட் பிறோ



பெண் : வாழ்த்து அட்டை உள்ளதா?
கடைக்காரார் : இருக்கிறது.
பெண் : நான் உன்னை மட்டும் காதலிக்கிறேன் என்று எழுதிய அட்டை உள்ளதா?
கடைக்காரார் : இருக்கிறது.
பெண்: அப்படியானால் 12 வாழ்த்து அட்டை தாருங்கள்.
கடைக்காரார் : ????

சர்மி சர்மிலன்

றொம்ப பாதிக்கப்பட்டிருப்பானோ!





துஷா துஷா

**பெண்ணின் குரல்**

மனைவியை அடிக்கும் கைகள்
கடவுளை வணங்கி என்ன பயன்...?
தன்னில் பாதி என்று மனைவியை
மதிப்பவன் கடவுள் போன்றவன்....!

நிதர்ஷ் சன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருட்டுச்சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா நெளுக்குளம் சந்தியில் அமைந்துள்ள கடையொன்றில கடந்த 2 ஆம் திகதி திருட்டுச் சம்பவம இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

குறித்த கடையின் 'உரிமையாளர் இரவு 11.00 மணியளில் கடையை பூட்டிவிட்டு மறுநாள்காலை கடைக்கு வரும்போதே கடை கொள்ளையிட்ட சம்பவம் தெரியவந்துள்ளது.

கடையிலிருந்த ம்டிக்கணனி மற்றும் கைதொலைபேசி உட்பட 2 இலட்சத்து 50ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாக கொள்ளையிடப்பட்டதாக கடை உரிமையாளர் தெரிவித்தார்

மேலதிக விசாரணையை வவுனியா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (6-250)




# புதிய பேருந்துகளுக்கான வழித்தட அனுமதிகளை இரத்து செய்யுங்கள்

## போக்குவரத்து அமைச்சருக்கு மகஜர்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் பேருந்துகளுக்கான புதிய வழித்தட அனுமதிகளை மீண்டும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் மற்றும் முல்லை. மாவட்ட அரச அதிபரும் வழங்குவதால் தாம் பாதிக்கப்படுவதாகவும் அவ்வழித்தடங்களை உடன் இரத்து செய்யுமாறு கோரி முல்லைத்தீவு மாவட்ட தனியார்பேருந்து உரிமையாளர்சங்கத்தின் கீழுள்ள பேருந்து உரிமையாளர்கள் மகஜர் ஒன்றை வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இது தொடர்பாக அம் மகஜரில் குறிப்பிட்டதாவது,

வன்னியில் இடம்பெற்ற இறுதியுத்தத்திற்கு முன்னர் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பயணிகள் போக்குவரத்து சேவைக்கான பேருந்துகள் சிற்றூர்திகள் சேவையில் ஈடுபட்டன. இதனால் மக்களும் பேருந்து உரிமையாளர்களும் நிறைவான பயன் அடைந்தனர்.

யுத்தம் முடிவடைந்த இறுதியில் வட்டுவாகல் பிரதேசத்தில் அனைத்து பேருந்துகளையும் கைவிட்டு இராணுவத்தினரிடம் தஞ்சமடைந்து பின்னர் நலன்புரி முகாமில் தஞ்சமடைந்திருந்தோம்.

பின்னர் கட்டம் கட்டமாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட போது போக்குவரத்து சேவைக்கு பேருந்துகள் தேவையான போது வசதி படைத்த புதியவர்கள் பலர் பேருந்துகளை கொள்வனவு செய்து பணியில் ஈடுபட்டனர்.

முன்னர் பேருந்து சேவையில் ஈடுபட்ட பேருந்து உரிமையாளர்கள் கைவிட்டுச் சென்ற பேருந்துகளை சென்று பார்த்த போது அவை எரிந்த நிலையில் அழிவடைந்திருந்தன.

இந்நிலையில் எம்மால் புதிய பேருந்துகளை கொள்வன்வு செய்ய முடியாமல் தவித்த நிலையில் வங்கியில் இருந்து குத்தகை முறையில் பேருந்துகளை கொள்வனவு செய்து பணியில் ஈடுபட்டோம்.

மீள்குடியேற்றப்பட்ட மக்களின் தேவைக்கதிகமாக எமது தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினால் மட்டும் 140 பேருந்துகளுக்கு வழித்தட அனுமதி வழங்கப்பட்டது.

இதேவேளை இலங்கை போக்குவரத்துச் சபையின் முல்லைசாலையில் 40 பேருந்துகளுக்கு அனுமதி இருந்த நிலையில் தற்போது 18 பேருந்துகள் பணியில் உள்ளன.

இவ்வாறு பேருந்துகள் அதிகரித்து காணப்பட்டதன் காரணமாக ஒரு பேருந்து சராசரியாக 20 நாட்களுக்கு பணியில் ஈடுபட வேண்டிய நிலையில் இன்று 8 தொடக்கம் 12 நாட்கள் வரையிலே சேவையில் ஈடுபடுகின்றது.

இவ்வாறான நிலையில் போதிய வருமானம் இன்றி குத்தகைப் பணம் செலுத்த முடியாமல் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்திற்குரிய 42 பேருந்துகளை கடன்கொடுத்த வங்கிகள் பறித்து சென்றன.

ஏனைய பேருந்து உரிமையாளர்களும் குத்தகைபணம் செலுத்த முடியாது இருக்கின்ற நிலையில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நடப்பாண்டில் நடைபெற்ற பொதுக்கூட்ட தீர்மானத்தை மீறி தற்போது 5 புதிய பேருந்துகளுக்கான வழித்தடஅனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதை எம்மால் எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

எனவே, போக்குவரத்து அமைச்சராகிய தாங்கள் அனுமதி வழங்கப்பட்டுள்ள புதிய பேருந்துகளின் அனுமதியை இரத்து செய்து உதவ வேண்டுமென பேருந்து உரிமையாளர்களால் அனுப்பப்பட்டுள்ள மேற் குறித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-15)

# வவு. மாணவி சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(குருமன்காடு)

சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 18 வயதான மாணவியொருவர் சிகிச்சை பலனின்றி 6-ஆவது நாளான நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது குறித்து தெரியவருவதாவது,

வவுனியா காத்தார் சின்னக் குளத்தைச் சேர்ந்த 18 வயதான கீர்த்திகா ஜோசப் என்ற மாணவி கடந்த 29 ஆம் திகதி தற்கொலைக்கு முயற்சித்து வவுனியா பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சைபலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

குறித்த மாணவி காதல் விவகாரத்தினாலேயே தற்கொலைக்கு முயற்சித்ததாக தெரிய வருகிறது. (6-250)



கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபர் அமரர் க.பொன்னம்பலம் நினைவு தினம் அண்மையில் கிளிநொச்சி சுவட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது பொன்னம்பலம் நினைவுரையை ஆற்றிய வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இரா.இரவீந்திரனுக்கு அமரர் க.பொன்னம்பலம் அறக்கட்டளை நிதியத்தினர் ஊடாக பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட போது... (படம்:-பூநகரி செய்தியாளர்)

# வடக்கில் தொடரும் தற்கொலைகள்

(மல்லாவி)

போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் தற்கொலை மரணங்கள் அதிகரித்து வருவதாக சமூக ஆர்வலர்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கவலை தெரிவித்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்ற 30 வருட யுத்தத்தின் போது மிக மோசமாக உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டதுடன் உறவுகளை இழந்த நிலையில் பொருளாதார வசதியுமின்றி கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

வறுமை காரணமாகவும் கடன் சுமைகள் ஏற்பட்டு குடும்பங்களுக்கிடையில் பிணக்குகள் ஏற்பட்டு தற்கொலை செய்வோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கிறது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டதிலிருந்து இன்றுவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் 60 இற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் உட்பட குடும்பத்தவர்கள் தற்கொலை செய்து கொள்வதாக புள்ளி விபரத் தகவல் தெரிவிக்கின்றன.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் ஜுலை மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 14 ஆண்களும் 5 பெண்களுமாக மொத்தம் 19 பேர் தற்கொலை செய்தனர்.

இதனைவிட இரண்டு பாடசாலை மாணவிகள் தற்கொலைக்கு முயற்சித்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்படிருந்தனர்.

இவர்களில் காத்தார் சின்னக் குளத்தை சேர்ந்தவரும் வவுனியா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் க.பொ.த.உயர்தரத்தில் கல்வி பயின்ற நிலையில் இவ் வருடம் பரீட்சைக்கு தோற்றும் மாணவியான கீர்த்திகா யோசப் (வயது 18) நேற்று முன்தினம் காலை 4.30 மணிக்கு மரணம் அடைந்தார்.

இதேவேளை கிளிநொச்சியில் புற்றுநோயில் பாதிக்கப்பட்ட குடும்ப பெண்ணொருவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு [illegible]

கிளிநொச்சி பாரதிபுரத்தை சேர்ந்த வரும் யாழ்.நகரில் பழக்கடை வியாபாரம் மேற்கொண்டிருந்தவருமான இரண்டு பிள்ளைகளின் தாய் கடந்த 30 ஆம் திகதி தனது வீட்டில் தற்கொலை செய்து கொண்டனர்.

வாழ்வாதாரத்திற்கு வசதியின்றி வறுமையுடன் போராடிய 6 பிள்ளைகளின் தந்தையான கிளிநொச்சி திருநகர் வடக்கைச் சேர்ந்த தம்பித்துரை மாணிக்க தியாகராஜா (வயது 38) என்பவர் மனைவியுடன் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக தற்கொலை செய்து கொண்டார்.

இவ்வாறு பலர் வன்னியில் வறுமை, வேலையின்மை, கடன் சுமை, வரட்சி மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பல காரணங்களால் தற்கொலை செய்து கொண்டதுடன் தற்கொலைக்கு முயற்சித்துள்ளனர்.

எனவே, அரச,அரச சார்பற்ற அமைப்புக்களும் வாழ்வாதார உதவிகளை வழங்குவதுடன் உள நல ஆற்றுகைகளையும் விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்த வேண்டுமென சமூக ஆர்வலர்களும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-15-250)

## நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறிக்கு தீ வைப்பு

வவுனியா, வைரவபுளியங்குளம், பண்டாரிகுளம் வீதியில் வாகன பழுதுபார்க்கும் இடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, வைரவபுளியங்குளம், பண்டாரிகுளம் வீதியில் உள்ள வாகன திருத்துமிடம் ஒன்றில் திருத்த வேலைகளுக்காக நிறுத்தப்பட்டிருந்த லொறி மீதே இனந்தெரியாத நபர்கள் தீ வைத்துள்ளனர். அவ் வீதியில் உள்ள ஆலயத்தின் திருவிழா முடிவடைந்து அவ் வீதி வழியாக வந்தவர்கள் லொறி தீப்பற்றி எரிவதைக் கண்டு அயலவர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து தீ பரவாமல் தடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த ஒருவருடைய லொறியே இவ்வாறு தீயிடப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (6-250)

## இளைஞனின் சடலம் மீட்பு

(குருமன்காடு)

மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்த இளைஞன் ஒருவரின் சடலத்தை வவுனியா பொலிஸார் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வைரவ புளியங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கொழும்பு வத்தளை மோதரையை சொந்த இடமாக கொண்ட விஸ்வலிங்கம் சரவணன் (வயது-28) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, தொழில் காரணமாக வைரவப்புளியங்குளம் வந்த மேற்படி நபர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு குறித்த பகுதியில் உள்ள மதுபான நிலையத்தில் மதுபானம்அருந்திவிட்டுவீட்டிற்குசென்றுஉறங்கியுள்ளார். இந்நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மதுபானம் அருந்திவிட்டு மதுபான நிலையத்தில் சில இளைஞர்களுடன் கைகலப்பில் ஈடுபட்டதாகவும் நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளதாகவும் அத்துடன் தலையில் காயம் ஒன்று இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

883

## இளவரசியின் தோழி செய்த வஞ்சனை

...அதன்பின் அம்சவல்லிக்குத் தன்னுடைய ஆடையைக் கொடுத்து அணியச் செய்துவிட்டு இளவரசியே! நகரத்தின் மேற்கு எல்லையில் ஆலமரம் ஒன்று உள்ளது. அதில் ஏறி ஒருகிளையில் ஒளிந்திருங்கள். நாம் போட்ட திட்டப்படி, எல்லாவற்றையும் முடித்துவிட்டு நான் வந்து உங்களைச் சந்திக்கிறேன் என்று கூறி எவருக்கும் தெரியாமல் அம்சவல்லியை வெளியேற்றி அனுப்பிவைத்தாள் கனகா.

அவள் .சொல்லியபடி அம்சவல்லி மேற்கு எல்லையை அடைந்தாள். அங்கே இருந்த ஆலமரம் கொப்பும் கிளையுமாக அடர்ந்து இருந்ததால் அதைப் பார்த்துப் பயந்துவிட்டாள். அதனால் அதற்குப் பக்கத்தில் இருந்த மற்றொரு அரச மரத்தில் ஏறி ஒளிந்திருந்தாள்.

இளவரசியின் உடையில் இருந்த கனகாவுக்கும் இளவரசன் கமலாகரனுக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அன்றைய தினமே கமலாகரன் தன் மனைவியை அழைத்துக்கொண்டு தன் நாட்டுக்குப் புறப்பட்டான். அவர்களுடன் திலகா என்ற தோழியும் சென்றாள். நகரத்தின் மேற்கு எல்லை வழியாக கமலாகரன் முதலானோர் போய்க்கொண்டிருந்தனர்.

அப்பொழுது கனகா அங்கே இருந்த ஆலமரத்தைப் பார்த்ததும் பயந்தவள் போலப் பாசாங்குசெய்து கமலாகரன் தோளைப் பற்றியபடி நடுநடுங்கிக் கொண்டிருந்தாள்.

அவள் நிலையைக் கண்டு திடுக்கிட்ட கமலாகரன் அவளைத் தேற்றி பயப்படுவதற்கான காரணத்தைக் கேட்டான். கனகா பெருமூச்சுடன் கூறலானாள்:

அன்புள்ள நாயகரே! நேற்று இரவு பயங்கர கனவு ஒன்று கண்டேன். பெரிய ஆலமரத்திலிருந்து ஒரு அரக்கி தோன்றி, என்னை விழுங்க முன்வந்தாள். நான் பயந்து நடுங்கி திருமாலை வேண்டினேன். அப்பொழுது அந்தணர் ஒருவர் தோன்றி ஓர் மந்திரத்தைச் சொல்லி, அந்த அரக்கியை விரட்டிவிட்டு என்னைக் காப்பாற்றினார்.

அதன்பின் அவர், பெண்ணே! அந்த ஆலமரத்தை உடனடியாகத் தீயிட்டுக் கொளுத்திவிடச்செய். மரம் தீப்பற்றி எரியும்போது அந்த அரக்கி மரத்திலிருந்து தப்பி ஓட முற்படுவாள். அவளை ஓடவிடாமல், எரிகின்ற தீயில் அவளைத் தள்ளிவிடு இல்லையானால் உன் உயிருக்கு ஆபத்து உண்டாகும் என்று கூறி மறைந்தார். எனவே, இப்பொழுது அந்த மரத்தைப் பார்த்ததும் நான் கண்ட கனவு நினைவுக்கு வந்து நடுங்குகிறேன் என்றாள்.



தன் மனைவியின் பயத்தைப் போக்கக் கருதிய கமலாகரன் தன் பணி ஆட்களை ஏவி அந்த ஆல மரத்தைத் தீ வைத்து கொளுத்தச் சொன்னான். மரம் குபுகுபு என எரிந் தது. ஆனால் கனகா நினைத்தபடி. அம்சவல்லி அந்த மரத்திலிருந்து வெளி யேறாததால் தீயில் அவள் மடிந் திருக்கக் கூடும் என்று தீர்மானித்து நிம்மதியாக கமலாகாரனுடன் கோசல நாட்டை அடைந்தாள்..... தொடரும்

## 05 08.2014 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1100-இங்கிலாந்து மன்னனாக முதலாம் ஹென்றி முடிசூடினான்.
- 1305-இற்கிலாந்துக்கு எதிராகக் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்த வில்லியம் வொலஸ் கிளாஸ்கோ அருகில் கைதுசெய்யப்பட்டு லண்டனுக்குக் கொண்டு செல்லப்பட்டான்.
- 1583- சேர் ஹம்பிறிகில் பேர்ட் வட அமெரிக்காவில் இங்கிலாந்துக்கான முதலாவது குடியேற்ற நாட்டை (தற்போதைய சென் ஜோன்ஸ் நியூபவுண்லாந்தில் அமைத்தார்.
- 1689-1,500 இரக்கேசுக்கள் கியூபெக்கின் லாச்சின் நகரைத் தாக்கினார்.
- 1806-இலங்கையில் முகமதியர்களுக்கான திருமணச் சட்ட விதிகள் அரசியலில் நிர்ணய சபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டன.
- 1862-அமெரிக்கா உள்நாட்டுப் போர் கூட்டமைப்பினர் லூசியானாவில் மிசிசிப்பி ஆறு வழியே அமெரிக்கப்படைகளை விரட்டினர்
- 1870-புரூசியர்களுக்கும் பிரஞ்சுப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரில் புரூசியா வெற்றி பெற்றது.
- 1884- விடுதலைச் சிலைக்கான அடிக்கல் நியூயோர்க் துறைமுகத்தில் பெட்லொ தீவில் நாட்டப்பட்டது.
- 1914- ஐக்கிய அமெரிக்காவும் பனாமாவும் கூட்டாக பனாமாக் கால்வாய் ஒப்பந்தத்தில் கைச்சாதிட்டனர்.
- 1940-இராண்டாம் உலகப் போர் லாத்வியா சோவியத் ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டது.
- 1943- இிராண்டாம் உலகப் போர் ட்ரொய்னா என்ற இடத்தில் போர் இடம்பெற்றபோது காலை 11.00 மணிக்கு எட்னா மலை வெடித்தது. இதன் மண்டலம் பல மைல் உயரத்துக்கு கிழம்பியது.
- 1944-இிராண்டாம் உலகப்போர் ஆஸ்திரேலியா நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் கொளரா நகரில் 545 ஜப்பானிய போர்கைதிகள் சிறையை உடைத்து தப்பிச் செல்ல எத்தனித்தனர்.
- 1944-போலந்து தீவிரவாதிகள் அங்கு செயற்பட்டுக் கொண்டிருந்த ஜேர்மனிய தொழிற்சாலை பண்ணையொன்றிலிருந்து 348 யூதர்களை விடுவித்தனர்.
- 1960- புர்கினா பாசோ (அப்பர் வொல்ட்டா) பிரான்சிடமிருந்து விடுதலை பெற்றது.
- 1962-17 மாதத் தேடுதலின் பின்னர் நெல்சன் மண்டேலோ கைது செய்யப்பட்டார். இவர் 1990 வரை விடுவிக்கப்படவில்லை.
- 1863 -ஐக்கிய அமெரிக்கா சோவியத் ஒன்றியம் ஐக்கிய ராச்சியம் ஆகியன காற்று மண்டலம் விண்வெளி மற்றும் நீருக்கடியில் அணுச் சோதனைகளை நிறுத்த உடன்பட்டன.
- 1969- மரைனர் 7 செவ்வாய்க் கோளிக்கு மிகக் கிட்டவாக (3,524கி.மீ) சென்றது.
- 1979-ஆப்கானிஸ்தானில் மாவோயிஸ்டுகள் இராணுவப் புரட்சி ஒன்றை முன்னெடுத்தனர்.


### பிறப்புகள்

- 1850-மாப்பசான் பிரஞ்சு எழுத்தாளர். (இ.1893)
- 1898- கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை வயலின் இசைக்கலைஞர். (இ.1970)
- 1908-ஹரல்ட் ஹோல்ட் அவுஸ்திரேலியாவின் 17 ஆவது பிரதமர். (இ1967)
- 1923-தேவன் நாயர் சிங்கப்பூர் அதிபர்.
- 1930-நீல் ஆம்ஸ்ட்றோங் சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதர். (இ.2012)
- 1968-நளாயினி தாமரைச் செல்வன் ஈழத்து எழுத்தாளர்.
- 1968-மரீன்லெபென் பிரஞ்சு அரசியல்வாதி

### இறப்புகள்

- 1895-பிரெட்ரிக் ஏங்கல்ஸ். மாக்சியத் தத்துவவியலாளர். (பி.1820)
- 1991- சொய்ச்சிரொ ஹொண்டா நிறுவனத்தின் தாபகர். (பி.1906)

### நீல் ஆல்டன் ஆம் ஸ்ட்ரோங்




நீல் ஆல்டன் ஆம் ஸ்ட்ரோங் 1930 ஆம் ஆண்டு ஆகஸட் மாதம் 5 ஆம் திகதி பிறந்தார். இவர் அமெரிக்க விண்வெளி வீரரும் சந்திரனில் தரையிரங்கிய முதல் மனிதரும் ஆவார்.

அத்தோடு இவர் வான் வெளிப் பொறியியலாளர் கப்பல் படை விமானி வெள்ளோட்ட விமானி மற்றும் பல்கலைக் கழக பேராசிரியர் போன்ற பதவிகளையும் வகித்துள்ளார். ஆம் ஸ்ட்ரோங் விண்வெளி வீரராக வருவதற்கு முன்னர் ஐக்கிய அமரிக்கக் கடற்படையில் அதிகாரியாக இருந்து கொரியப் போரில் பணியாற்றினார். போரின் பின்னர் பெர்டு பல்கலைக்கழகத்தில் தனது இளங்கலைப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டு தேசிய வானூர்தியியல் ஆலோசனை செயற்குழுவின் அதிவேக விமான நிலையத்தில் வெள்ளோட்ட விமானியாக பணி புரிந்தார். தேசிய வானூர்தியியல் ஆலோசனை செயற்குழுவே தற்போழுது டிரைடன் விமான ஆராய்ச்சி மையம் என்று அழைக்கப்படுகின்றது. இங்கு அவர் 900 இற்கு மேற்பட்ட விமானங்களை ஓட்டியுள்ளார். நீல் ஆம் ஸ்ட்ரோங் பின்னர் தனது பட்டப் படிப்பை தென் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்தார். 1969 ஜூலை 20 இல் அமெரிக்காவின் அப்போலோ-11 விண்கலத்தில் எட்வின் ஆல்ட்ரின் மைக்கேல் கொலின்ஸ் ஆகியோருடன் பயணித்த ஆம் ஸ்ட்ரோங் முதலில் சந்திரனில் காலடி வைத்தார். இவரைத் தொடர்ந்து எட்வின் ஆல்ட்ரினும் சந்திரனில் தரையிரங்கினார். இவர் சந்திரனில் காலடி எடுத்து வைக்கும்போது முதலில் இடது காலையே வைத்தார். ஜூலை 2012 இல் இதயச் அறுவைச் சிகிச்சை செய்திருந்தார். அதில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இறந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்


## "சாதனை நாயகனின் சரித்திரம்"



...நான் செய்த சாதனைகளைக் கூறி அதேபோன்று டெஸ்ட் போட்டிகளிலும் செய்து முந்தைய சாதனையை முறியடிக்க வேண்டும் என்று ஊக்கப்படுத்தினார். எனது சாதனைகள் எனக்கு மட்டும் சொந்தமல்ல. இந்திய அணிக்கும் இந்திய நாட்டிற்கும் பெருமை என்று சொல்லி என் மனதில் இருந்த அச்சத்தைப் போக்கினார். நிஜமாகவே ரொம்ப நெர்வசாக இருந்தது. ஒருசமயம் கவாஸ்கருடன் பேசிக்கொண்டிருந்தபோது அவரும் தனது முதல் டெஸ்டின்போது இதே நிலையில்தான் இருந்தேன் என்று சொன்னார். என்னைச் சுற்றி



இருந்தோர் அனைவரும் ஜாம்பவான்கள். சிலர் என்னை விட இருமடங்கு வயதுள்ளவர்கள். மகாபாரதப் போரில் அத்தனை ஜாம்பவான்கள் இருக்க அவர்களை எதிர்த்து நின்ற இளைஞனான அபிமன்யுவின் நிலையில்தான் நான் இருந்தேன். கும்மிருட்டில் தள்ளிவிடப்பட்டது போன்று



## குழந்தையே இங்கு உனக்கு என்ன வேலை?

உணர்ந்தேன். சுற்றி நிற்பவர்கள் யார்? என்ன செய்ய வேண்டும் என்று ஒன்றுமே புரியவில்லை. யோசித்து முடிப்பதற்குள் அக்ரம் வீசிய பந்து புயல்போல் என்னை நோக்கி வந்துகொண்டிருந்தது. பேட்டை எடுத்து அடிப்பதற்குள் பந்து என்னைத் தாண்டி போய்விட்டது. ஒரே ஓவரில் வரிசையாக நான்கு பவுன்சர்கள் போட்டார். ஒவ்வொரு பந்தும் எனது தலைக்கு மேலே பறந்து சென்றது. தட்டுத் தடுமாறி 29 நிமிடங்களில் 24 பந்துகளில், 15 ரன்கள் எடுத்தேன். கடைசியில் யூனுஸ் வீசிய பந்தில் அவுட் ஆனேன்.

பெவிலியன் திரும்பியவுடன் ரவி சாஸ்திரியிடம் நான் அவசரப்பட்டு ஆடியதால் அவுட் ஆனேன் என்று கூறினேன். ஆனால் அவரோ 16 வயதில் இந்தியாவிற்கே ஆடுவதே பெரிய விடயம். ஆடும்போது உனக்காக ஆடாமல் நம் நாட்டிற்காக ஆடுகிறோம். அணிக்கு எது நன்மை தருமோ அந்த வகையில் ஆட வேண்டும் என்று நினைத்து ஆடு என்று ஆலோசனை கூறினார் என்றான்.

இரண்டாவது டெஸ்ட் ஃபைசலாபாத்தில் நவம்பர் 23 ஆம் திகதி துவங்கியது. வக்கார் அதில் இடம்பெறவில்லை என்றதும் நமது ரசிகர்கள் கொஞ்சம் நிம்மதிப்பெருமூச்சுவிட்டனர். முதல் டெஸ்டில் 15 ரன்கள் மட்டுமே எடுத்திருந்த நிலையில் சச்சின் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு தேர்வு செய்யப்படுவாரா என்பது கேள்விக்குறியாகவே இருந்தது. இருப்பினும் வளர வேண்டிய ஒருவனுக்கு இரண்டு மூன்று வாய்ப்புகள் கொடுத்தால்தான் அவனது முழு திறமையையும் வெளிக்கொணர முடியும் என்று எண்ணிய கிரிக்கெட் வாரியம் சச்சினுக்கே மீண்டும் வாய்ப்பு வழங்கியது. கிரிக்கெட் வாரியம் தன்மீது வைத்திருந்த நம்பிக்கையை அதிக ரன்கள் எடுப்பதன் மூலம் இந்தமுறையாவது காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்று சச்சின் உறுதி பூண்டான். இந்திய அணியில் அங்கோலாவிற்கு பதில் விவேக் ரஸ்தானும் அர்ஷய் அயூபிற்கு பதில் மணீந்தரும் அணியில் சேர்க்கப்பட்டனர். இம்ரான் டாஸ் ஜெயித்து இந்திய அணியை ஆட அழைத்தார். ஸ்ரீகாந்த் சித்து மற்றும் சாஸ்திரி ஆட்டம் இழக்க இந்தியாவின் ஸ்கோர் 4 விக்கெட் இழப்பிற்கு 101 ரன்கள். மும்பை ஜோடிகளான மஞ்சுரேகர் மற்றும் சச்சின் இருவரும் ஆடத் துவங்கினர். இருவரும் 143 ரன்களைக் குவித்தனர். பலத்த எதிர்பார்ப்புகளுக்கு இடையே சச்சின் தனது முதல் அரை சதத்தை அடித்தான்.

**கே. ரமேஷ்** (தொடரும்)

**வாக்கரிடம் இருந்து வந்த பந்து எதிர்பாராத நேரத்தில் சச்சினின் மூக்கில் வந்து வேகமாகத் தாக்க சச்சின் நிலை தடுமாறினான். பலமாக அடிபட்டு மூக்கில் இருந்து ரத்தம் ஒழுக சச்சின் கீழே விழுந்தான். உதிரம் சொட்டச் சொட்ட நிற்கும் ஆட்டைச் சுற்றி ரத்த வெறி பிடித்த ஓநாய்க் கூட்டங்கள் நின்று ரசிப்பது போன்று பாகிஸ்தான் அணியினர் சச்சினைச் சுற்றி நின்றிருந்தனர். பாகிஸ்தான் ரசிகர்களோ எங்களுக்கு இந்த ரத்தம் போதாது. இன்னும் வேண்டும் என்று கூறுவது போல் கரகோஷம் எழுப்பி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.**

# உங்கள் பிறந்த எண் 07 இல் கூட்டெண் 09 இன் பலன்கள்

**56**

### தோற்றம்

கேதுவுடன் செவ்வாய் சேர்ந்த ஆதிக்கமாகும். சராசரி உயரமாயிருப்பர். தேகம் ஒல்லியாக உறுதியுடன் இருக்கும். நீளசதுர முகம் சற்று விநோதமாக இருக்கும். செவ்விழிகள் மிரட்டுவதுபோல இருக்கும். வேகமாக கை காலசைவுடன் இருக்கும். அழகாக இருக்கமாட்டார். பற்கள் நீளமாக இருக்கும். ஒழுங்காயிருக்காது. வாய் பெரிதாக மெலிந்த உதடுகளுடனிருக்கும். தாடை பெரிதாக சாதாரண நெற்றியிருக்கும். மாநிறமிருக்கும். முடி நிறைய இருக்கும். குரல் மந்தமாக தொனிக்கும். கோபக்காரத் தோற்றம். கவர்ச்சியிராது.

### குணம்

தெய்வபக்தி உள்ளவர். மிகவும் ரிசர்வ்டு மாதிரி. அதிகம் பிறரிடம் பழகமாட்டார். மிகவும் துக்கத்தை உள்ளடக்கியவர். ஆனால், தந்திரமானவர். பிரச்சினைகளால் பாதிக்கப்படுவர். எதிர்த்தும் போராடுவர். பணிந்து விட்டுக் கொடுத்தும் போவர். அப்படியும் துன்புறுத்தினால் எதிர்த்துச் சண்டைபோட்டு விடுவர். இவர்களைப் பிறர் மிகவும் படுத்துவர். அசட்டுத்தனத்தால் அவதிக்குள்ளாவர். அதிக லாபமில்லாததில் போய் பிடிவாதம் பிடிப்பர். இரக்க மனமும் உதவும் குணமும் உண்டு. எப்போதும் மகிழ்வாக இருக்கவே விரும்புவர். ஆனால், இவர்களைச் சுற்றியிருக்கும் விசுவாசமில்லாதவர்கள் இவர்களை நிம்மதியாக இருக்க விடமாட்டார். எப்போதும் எதாவது இவர்கள் மனதின் கவனத்தை ஆக்கிரமிக்கும் கவலை இருக்கும். இதனால் தோற்றத்தைக்கூட தூய்மையாய் வைத்துக்கொள்ள மாட்டார். தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் போக்கும் இவரிடம் காணப்படும். தேவதாஸ் போலக் குடித்தோ சூதாடிக்கொண்டோ அடிதடி செய்தோ கெட்டுப்போவர். காதலை விரும்பும் இவர்களுக்குக் காதல் நிறைவேறாது. பணத்தையும் சம்பாதிக்க முடியாது. நட்பும் கிடைக்காது. பிறருக்கு உதவப்போய் மாட்டிக்கொள்ளுவர். பிரதி பலன் எதிர்பாராமல் தேசத்திற்காக மொழிக்காக மக்களுக்காகப் பொதுத் தொண்டாற்றுவர். நியாயம் காக்க அநீதியைக் கண்டித்துக் கோபம் வரும். பிறர் அஞ்சும்படி கோபிப்பர். பேசுவர். ஆனால், பிறரை எடைபோட்டு வைத்திருப்பர். ஒளிவு மறைவு இல்லாதவர். இதனால் இவரைப் பலரும் பயன்படுத்திக் கொள்ளுவர். இருந்த இடம் விட்டு மாறி வேறு இடம் போய்ப் பிரபலமாவார். பெண்களில் சிலர் கவர்ச்சியாக இருப்பதும் உண்டு. இவர்களுக்கு விரோதிகள் ஏற்படுவர். காதல் புரிவர். கலியாண வாழ்வில் அவஸ்தைப்படுவர். நல்ல மனம் இருந்தும் தெய்வ பக்தி இருந்தும் மன வேதனை அதிகமாகும்.

### திருமணம்

காதலித்தோ [illegible] பெற்றோர் பார்த்துச் செய்த மணமாயினும் வாழ்க்கைத் துணை சரிவராது. நித்திய சண்டையாக நடக்கும். சந்தேகம் வாழ்வைக் கெடுக்கும். பெற்றோர் அன்பும் கிட்டாது. கணவர் மனைவி பிரிவதோ விவாகரத்தோ இடம்பெறும். சில பெண்கள் நஞ்சால் தீயால் மரிப்பதுண்டு. இறக்கும்போது அருகில் வேண்டியவர் இல்லாமலும் போவர். இவர்கள் ஆசை நிறைவேறாத நெஞ்சுடன் இறப்பர்.

### தொழில்

மருத்துவத்துறையில் அறுவைச்சிகிச்சை மருத்துவ நிபுணராவர். நர்சாக இருப்பர். ரசாயனத் தொழிற்சாலை சர்க்கஸில், ஜவுளிக்கடையில் உலோகம் பயன்படும் தொழிற்சாலையில் எரிபொருள், எண்ணெய் கம்பெனிகளில் மின்சாரம், அக்னி உலை உள்ள இடத்தில் கணக்கு சம்பந்தமானதில் வேலை பார்ப்பர். ரியல் எஸ்டேட்காரராக நிலவியல் நிபுணராக சிவில் என்ஜினியராக இருப்பார். மண்ணெண்ணெய் சம்பந்தப்பட்ட தொழில் செய்வர். கட்டட வேலை, தொழிற்சாலைத் தொழிலாளர்களாக இருப்பார். பேயோட்டும் பூசாரியாக இருப்பார். கலை இலக்கிய கர்த்தாக்களாக இலக்கிய சேவை புரிபவராக ஆன்மிக மத போதகராக எழுத்துத்துறையாளராக இயக்குநராக இருப்பார். என்ஜினியராவார். நடனம், இசை நன்கு [illegible] புகழ் பெறலாம். ஓவிய [illegible] புரட்சியாளராக அமைச்சராக



தீவிரவாதியாகவும் பணிசெய்வர். பொலிஸ் இராணுவம் பொருத்தமான துறை. ஜோதிடராக இசையமைப்பாளராக நடனக்காரியாக இருப்பார். மனோதத்துவ மருத்துவராக தத்துவப் பேராசிரியாக இருப்பார்.

### நோய்

வயிற்றுவலி, அல்சர், வாத சுரம், வலி வரும் பி.பி. இருமல் உண்டு. காச நோய், பித்த வாந்தி பேதி உண்டு. மூளைப் பாதிப்பு முகவாதம் வரலாம். விபத்தும் அடி தடியும்கூடப் பாதிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகப்பருக்களை முற்றிலும் போக்க சித்தமருத்துவத்தில் நிரந்தரத்தீர்வு



பெண்களின் பொதுவான கவலை -முகப்பருக்கள். பருவ வயதில், பருக்களும் கூடவே வரும். இது ஹார்மோன் மாற்றத்தால் வருவதுதான் என்றாலும் என்ன... முகமெல்லாம் இப்படி முத்து முத்தா... எண்ணெயில் பொரிச்சதைச் சாப்பிட்டா இப்படித் தான். இராத்திரி படுக்கைக்கு போகும் போது ஜாதிக்காய் இழைச்சுப் பூசு என்று ஆளாளுக்கு அட்வைஸ் செய்யும்போது, இன்னும் மன உளைச்சல் தலைதூக்கும்.

**பரு உருவாகக் காரணம்**

வாதம், பித்தம், கபம் என்ற மூன்று தோஷங்களில் ஏதேனும் ஒன்றில் இடையூறு ஏற்படுவது தான் பரு வருவதற்குக் காரணம் என்கிறது சித்த மற்றும் ஆயுர்வேத மருத்துவம்.

அதிக வரட்சி, அதிக உஷ்ணம், அதிகக் கொழுப்பு இவை மூன்றுமே முகப் பருக்களாகப் பிரதிபலிக்கும்.

இதைத் தவிர, அதிகமான உளைச்சல், சமச்சீரற்ற ஹார்மோன்கள், எண்ணெய் சுரப்பிகள் அதிகம் சுரப்பதால் முகத்திலுள்ள நுண் துளைகள் அடைபடுதல், மலச்சிக்கல் மற்றும் பொடுகுத் தொல்லை இவை எல்லாமே மிக முக்கிய காரணங்கள். நீண்ட கால சைனஸ் தொல்லைக்கான அறிகுறியாகவும் பரு உண்டாகும்.

பி.ஸி.ஓ.டி. எனப்படும் சினைப்பையில் நீர்க்கட்டி பிரச்சினை இருப்பவர்களுக்கும் பரு உண்டாகலாம். சிலருக்கு பல்லில் சொத்தை, நோய்த்தொற்று இருந்தாலும் கூட அதன் வெளிப்பாடாகப் பருக்கள் வர வாய்ப்பு உண்டு.

**சிகிச்சை முறைகள்**

சருமத்துக்கு வெளிப்புறத்தில் சிகிச்சை எடுப்பதைவிட, உள்ளுக்குள் மருந்து சாப்பிட்டால்தான் பருத் தொல்லைக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும்.


எதனால் வந்தது என்ற மூல காரணத்தைத் தெரிந்து, அதற்கு சிகிச்சை எடுத்துக்கொண்டால், பருவை முற்றிலும் போக்கலாம்.

இதற்கு குறைந்தபட்சம் ஆறு வாரங்களாவது சிகிச்சை மேற்கொள்ளவேண்டும்.

சித்த வைத்திய முறையில், இரத்தத்தைச் சுத்தப்படுத்தி, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, சிறந்த மருந்துகள் உள்ளன.

பருக்களைப் போக்க சிறந்த மருந்து மஞ்சிஷ்டா **(Rubia cordifolia).**

இது பொடியாகவும் திரவ நிலையிலும், ஆயுர்வேத மருந்துக் கடைகளில் கிடைக்கும். பொடியாக இருந்தால், தண்ணீரில் கலந்து கஷாயமாகக் காய்ச்சி அருந்த வேண்டும்.



இது சிறந்த வலி நிவாரணியாகவும் செயறபட்டு, உடலில் அழுக்குகளை வெளியேற்றி, புண்ணை ஆற்றும் பருக்களில் நீர் மற்றும் சீழ் வடிந்தால், இந்த மருந்தைத் தொடர்ந்து எடுக்கும் போது, காய்ந்து உதிர்ந்துவிடும்.

அத்துடன் பரு வந்த தழும்புகளும மறைந்து சருமத்துக்குப் பொலிவைக் கொடுக்கும். திருநீற்றுப் பச்சிலையை அரைத்து, பருக்களின் மீது தடவ, ஓரளவு கட்டுப்படும்.

இரண்டு ஸ்பூன் திரிபலா சூரணத்தை, சுடுதண்ணீரில் கலந்து முகத்தைக் கழுவலாம்.

எண்ணெய்ச் சருமத்தினருக்கு, பருக்கள் பழுத்து இருக்கும். இவர்கள திரிபலா சூரணத்தைக் குழைத்து முகத்தில் பேக் போட்டு, 10அல்லது 15 நிமிடங்களுக்குப் பின்பு கழுவினால், நல்ல பலன் இருக்கும். ஆனால், எணணெய்ச் சருமத்தினர் மட்டுமே இதைப் போடவேணடும்.

அதிமதுர வேரைப் பொடித்துக் குழைத்து பருக்கள் மீது போடலாம். தொடர்ந்து போட்டு வர உதிர்ந்து விடும. இந்தப் பொடியை பயத்த மாவில் கலந்து குழைத்து பேக் போட்டு சில நிமிடங்கள் காயவிடடுக் கழுவலாம்.

அதிமதுரத் தூளை தேநீர் போலக் கொதிக்கவைத்து அருந்தலாம். ஹார்மோன்களைச் சீராக்கி, மன அழுத்தத்திலிருந்தும் விடுபட உதவும்.

அஜீரணத்தைப் போக்கும். மாத்திரை வடிவிலும் கிடைக்கிறது. வல்லாரைக் கீரையை அரைத் துப் பூசலாம். உணவோடும் சேர்த்துக் கொள்ளலாம். நல்ல பலன் தரும.

**உணவு முறை மாற்றம்!**

பருக்களுக்கு, நாம் உண் ணும் உணவும் ஒரு காரணம்.சருமப் பிரச்சினை இருப்பவர்களுக்கு, கொழுப்புத் தாதுவும் இரத்தத் தாதுவும் சீர்கெடுகிறது.

எனவே, இரத்தத்தைச் சுத்தப்படு த்தி, கொழுப்பைக் குறைப்பதற்கான உணவு தான் தேவை.

இரத்தத்தைச் சுத்திகரிப் பதில், முக்கிய பங்கு வகிக்கும் கல்லீரலைப் பலப்படுத்த, கரிசலாங்கன்னிக் கீரை பொன்னாங் கன்னிக் கீரை உலர் திராட்சை, விற்றமின் ஏ நிறைந்த கரட், பப்பாளி, மஞ்சள் நிறக் காய்கறிகள் மற்றும் பழங்களையும் அதிகம் சேர்த்துக் கொள்ளலாம்.

இவை இரத்தத்தில் இருக்கும் நச்சுக்களை வெளியேற்றி சுத்திகரிக்க உதவுகின்றன. நாள் ஒன்றுக்கு, குறைந்தது 3 லீற்றராவது தண்ணீர் அவசியம் அருந்த வேண்டும்.

**மனசே ரிலாக்ஸ்!**

மனதை எப்போதும் ரிலாக்ஸ்டாக வைத்துக்கொள்ள வேண்டும். மன அழுத்தமும் பருக்களை அதிகப்படுத்திவிடலாம். இதற்கு ஆழமான சுவாசப் பயிற்சி மிகவும் உதவும்.

இதற்கு ரன்னிங் ஜாகிங் போன்றவை, ஒட்சிசன் வழுங்கலை அதிகரிக்கும் பயிற்சிகள். இதனால், சருமத்துக்குப் புத்துணர்வு கிடைப்பதுடன், மன அழுத்தத்தில் இருந்தும் விடுபடவும் உதவும்.

**தவிர்க்க வேண்டியவை**

பரு வந்தவர்கள் மருந்தையோ கிரீமையோ கை வைத்திய முறையையோ மாற்றி மாற்றி பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். எந்த பவுடரும் போடக் கூடாது. அடிக்கடி சோப் மாற்றுதல், ஃபேஸவாஷ் உபயோகித்து முகம் கழுவுதல், டோனர் மற்றும் க்ளென் ஸர் உபயோகிப்பது போன்ற பழக்கங்களை இதன்போது தவிர்ப்பது நல்லது.

மேலும் தேநீர், கோப்பி, மசாலாக்கள் நிறைந்த கார மற்றும் புளிக்க வைத்த உணவுகள், வறுத்த, பொரி த்த எண்ணெய்ப் பதார்த்தங்கள் மற்றும் கொழுப்பு நிறைந்த சீஸ், மில்க் ஷேக், குளிர்விக்கப்பட்ட உறையவைக்கப்பட்ட உணவுகளைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

**பருக்கள் வராமல் இருக்க**

**1.நன்னாரி தேநீர்**

10 கிராம் நன்னாரி வேருடன் மல்லி விதை, பெருஞ்சீரகம் தலா அரை டீஸ்பூன் சேர்த்து, நன்றாகப பொடிக்கவும். இதில் ஒன்றரை டம்ளர் தண்ணீர் சேர்த்துக் கொதிக்கவைத்து, ஒரு டம்ளராகச் சுண்டியதும் வடிகட்டவும்.

தினமும் காலையிலும் மாலையிலும் இந்த தேநீரை அருந்தி வரவும். இரத்தத்திலிருக்கும் நச்சுக்களை வெளியேற்றி, செரிமானத்தைச் சீராக்கி, குளிர்ச்சியைத் தரும். நோய்த் தொற்றும் போய்விடும்.

**2.நலங்கு மாவு**

சோப்புக்குப் பதிலாக, இந்த நலங்கு மாவைத் தேய்த்துக் குளிககலாம். ஒரு கிலோ பாசிப் பயறுடன, 50 கிராம் சந்தனம் மற்றும் கோரைக் கிழங்கு, கிச்சிலிக் கிழங்கு தலா 100 கிராம், கஸ்தூரி மஞ்சள், வெட்டிவேர், விளாமிச்சை வேர், கார்போக அரிசி (இவை அனைத்துமே நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும்) தலா 200 கிராம் சேர்க்கவும். எல்லா வற்றையும் நன்கு காய வைத்து, மிஷினில் கொடுத்து அரைத்துப் பயன்படுத்தலாம்.





# சர்வதேச விசாரணைக்கு இந்தியா ஊக்கமளிக்க வேண்டும்

பாதிக்கப்பட்ட ஒரு இனம் நீதியைப பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற மனிதாபிமான அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளரால் இலங்கையில் இடம் பெற்ற மனிதவுரிமைகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான சர்வதேச விசாரணைக் குழுவின் செயற்பாடுகளுக்கு இந்தியாவுக்கு வருகைதருவது தொடர்பில் இன்னமும் அனுமதி கோரியிருக்காத நிலையில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப்பேரவையின் கடந்த கூட்டத் தொடரின் போது கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீதோன வாக்கெடுப்பில் இந்தியா எவ்வாறான நிலைப் பாட்டை கொண்டி ருந்தது என்பதை அடிப்படையாக வைத்தே விசாரணையாளர்கள் இந்தியாவுக்குள் வருகை தருவதற்கான அனுமதி வழங்கப்படும் என இந்திய வெளி விவகார அமைச்சின் பேச்சாளர் சையத் அக்பருதீன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. இவ்விடயம் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ்பிரே மச்சந்திரன் கூறுகையில்,





இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றதாக கூறுப்படும் மனிதவுரிமை மீறல்கள தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப பேரவையால் சர்வதேச நபுணர்கள் அடங்கிய விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு அவர்களது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டி ருக்கின்றன.

அவ்வாறான நிலையில் அக் குழு இலங்கைக்குள் வருகை தருவதற்கு ஒருபோதும் அனுமதிப்பதில்லை என அரசாங்கம் உறுதியாக தெரிவித்திருப்பதுடன் சாட்சியமளப்பவர்களின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச் சரவைப் பேச்சாளரே பகிரங்கமாக கூறியி ருக்கின்றார்.

பாதிக்கப்பட்டவர்கள் தமக்கான நீதி நியாயம் கிடைப்பதற்காக தாமாகவே முன் வந்து சாட்சிய மளிக்க தயாராக இருக்கின்ற போதும் அரசாங்கத்தின் இவ்வாறான கருத்துக்களால் அச்சமடைந்துள்ளனர். மேலும் சாட்சியங்கள் வெளிநாடுகளில் சென்று சாட்சியமளிக்க முடியாத நிலைமையும் மறைமுகமாக தோற்றுவிக்கப் பட்டிருகின்றது.

இவ்வாறான நிலையில் இந்தியாவுக்குள் சர்வதேச விசாரணையாளர்கள் வருகை தருவதற்கு உத்தியோக பூர்வமான அனுமதி கோரப் பட்டிருக்காத நிலையில் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கடந்த ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையில் கொண்டுவரப்பட்ட அமெரிக்க தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பின் போது இந்தியா கொண்டிருந்த நிலைப்பாட்டை கவனத்தில் கொண்டே அனுமதி கோரினால் முடிவெடுப் போம் என கூறியிருக்கின்றார்.

இந்தியாவைப் பொறுத்தவரையல் இலங்கையின் அயல்நாடாகும். மேலும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான நிரந்த தீர்வுக்கு இந்தியாவின் வகிபாகமும் இன்றியமையதொன்றாகும். இன்றுவரையில் தமிழினத்திற்கு எந்தவொரு அதிகாரத்தையும் வழங்ககூடாது என கருதும் அரசாங்கத்திடமிருந்து எவ்வாறு நியாத்தையோ அல்லது நீதியையோ பாதிக்கப்பட்ட தரப்பு எதிர்பார்க்க முடியும். அதனடிப்படையில் பாதிக்கப்பட்ட இனத்திற்கு நியாயமும் நீதியும் கிடைப்பதற்காக சர்வதேச விசாரணைக் குழுவின் செயற்பாட்டுக்கு இந்தியா ஊக்குவிப்பை வழுங்குவது அதன் தார்மீகக் கடைமையாகும். அதனைக் கருத்தில் கொண்டு இந்திய அரசாங்கம் தனது தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதுடன் சாட்சியங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஒத்துழைப்புக்களை வழுங்க வேண்டும் என்றார்.


இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதவுரிமை மீற ல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டுள்ள விசாரணைக் குழவானது எதிர்வரும் செப்டெம்பர் மாதம் தனது இறுதி அறிகையை ஐக்கிய நாடுகள் சபையின் புதிய மனிதவுரிமை ஆணையாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ள ஜோர்தானின் இளவரசர் செய்த் அல் ஹசைன் கையளிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டு மக்களை நடு வீதிக்கு கொண்டு வந்த பெருமையுண்டு

## மஹிந்த மீது ரணில் குற்றச்சாட்டு





கடந்த ஒன்பது வருடங்களாக நாட்டை ஆட்சி செய்து வரும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மக்களை நடுவீதிக்கு கொண்டு வந்து விட்டது என எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியினால் முன்னெடுக்கப்பட்டு வரும் ஜனஜய திடடத்தின் ஒரு அம்சமாக மஸ்கெலியா பகுதி வாக்கெடுப்பு நிலைய பொறுப்பாளர்களுக்கான அறிவுறுத்தல் நிகழ்வு ஹற்றன் டி.கே.டபிள்யூ கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதேச பொறுப்பாளரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான கே.கே.பியதாச, பாராளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன், அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர் ரவீந்திரன், மாகாண சபை உறுப்பினர் ரேணுகா ஹேரத், ஹற்றன் -டிக்கோயா நகர சபையின் எதிர்க்கட்சி தலைவர் பாமிஸ் ஹாஜியார் உட்பட பல ஐக்கிய தேசிய கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர்,

நான் இப்பகுதியின் பல இடங்களுக்குச்சென்று கொண்டிருந்த போது பாதைகள் புனரமைக்கப்பட்டுக் கொண்டிருந்ததை அவதானித்தேன். என்னவென்று கேட்டபோது பாதைகளுக்கு காப்பெற் இடுவதாகக் கூறினார்கள். இந்த நாட்டு மக்களை நடு வீதிக்குக் கொண்டு வந்த பெருமை ராஜபக்ஷ அரசாங்கத்தையே சேரும்.

இப்போது இந்த மக்கள் இங்கேயே மரணிப்பதற்கு உதவியாக வீதிகள் காப்பெற் இடப்படுகின்றன. இந்த மக்களின் ஆத்மா போன பிறவியில் புண்ணியம் செய்திருக்க வேண்டும் இல்லாவிட்டால் காப்பெற் வீதியில் மரணிக்க முடியுமா என்ன?

முதலில் மக்களுக்குரிய அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். பெருந்தோட்ட மக்களுக்கு மலசலகூட வசதிகளையே செய்து கொடுக்காதவர்கள் எங்ஙனம் வீடுகளை அமைத்துக் கொடுக்கப் போகின்றார்கள்? இதை இங்குள்ளோர் சிந்திக்க வேண்டும்.

நாம் ஆட்சிக்கு வந்தால் மலையக மக்களுக்கென வீட்டுத்திட்டத்தை உருவாக்குவோம். ஏனெனில் இம்மக்களின் அடிப்படை பிரச்சினைகள் பற்றிய தெளிவு அக்காலத்திலிருந்து ஐ.தே.கவுக்கு மட்டுமே உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (6)

## போலி நாணயங்களுடன் இந்தியர் இருவர் கைது

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் ஓட்டமாவடி பகுதியில் இந்திய போலி நாணயம் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஓட்டமாவடியில் உள்ள வர்த்தகர்கள் இருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் அதிகாரி ஜே.ஏ.யு.பி.ஜயசிங்கவின் வழிகாட்டலில் இந்திய நாட்டு 500 ரூபா பெறுமதியில் 98 தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இதனுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இரண்டு வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திப்புட்டுமுன தெரிவித்தார். (6)

## நட்டமோ நட்டம்

இலங்கை பெற்றோலிய கூட்டுத தாபனத்துக்கு சுமார் 583 மில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளது.

கவனயீனம் காரணமாக கடலுக்கு அடியில் எரிபொருள் விநியோகப் பிரிவில் ஏற்பட்ட சேதம் காரணமாக 5 எரிபொருள் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் பல நாட்களாக நங்கூரமிட்டிருந்தன.

கடந்த ஜூன் 14ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இந்தக் கப்பல்கள் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்தன.

இந்த கப்பல்களுக்கு தாமத கட்டணங்களாக மாத்திரம் 583 மில்லியன ரூபாய்கள் செலுத்தப்பட்டுள்ளன.

இதனை தவிர அவசியமற்ற வகையில் எரிபொருள் தாங்கி ஒன்றை வாடகைக்கு அமர்த்தியமைக்காக மாத்திரம் 82 மில்லியன் ரூபாய்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் செலுத்த வேண்டியுள்ளது.

சிங்கப்பூருக்கு சொந்தமான அந்த எரிபொருள் தாங்கி, கப்பல் ஒன்றில் இருந்து கப்பலுக்கு எரிபொருளை ஏற்றுவதற்காகவே கொண்டு வரப்பட்டது.

எனினும் எரிபொருள் கப்பல் நிறுவனம் ஒன்று, குறித்த தாங்கியின் மூலம் எரிபொருளை தமது கப்பலில் இருந்து மற்றும் ஒரு கப்பலுக்கு ஏற்றுவதற்கு மறுப்பு தெரிவித்தது.

இதன்காரணமாக வெறுமனே குறித்த கப்பலுக்கு நாளொன்றுக்கு 2.73 மில்லியன் ரூபாய்களை செலுத்த வேண்டியேற்பட்டுள்ளது.

குறித்த எரிபொருள் தாங்கி ஒரு மாத உடன்படிக்கை அடிப்படையில் கொண்டுவரப்பட்டமையால், அதனை திரும்ப எடுத்துச்செல்ல உரிமையாளர் நிறுவனம் மறுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## சொத்து விபரங்களையும் மனுவுடன் சமர்ப்பிக்கவும்

### தேர்தல் ஆணையாளர்

எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், தங்களின் சொத்து விபரங்களை வேட்பு மனுக்களுடன் தாக்கல் செய்ய வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாண சபைக்கான வேட்பு மனு தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் இந்த மாதம் 6ஆம திகதியுடன் நிறைவடைகிறது. இந்த காலப்பகுதிக்குள் சொத்து விபரங்களும் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, வேட்பாளர்கள் தங்களின் பிறப்பு சான்றிதழ் மற்றும் அடையாள அட்டையில் உள்ள பெயரை மாத்திரமே பயன்படுத்த முடியும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அரசியல் கட்சிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"இதேவேளை, ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட விரும்பும் சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்துவதற்கான கால அவகாசம நண்பகல் 12 மணியுடன் முடிவடைவதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்வதற்கான அறிவிப்பு விடுக்கப்பட்டதிலிருந்து இதுவரையில் மொனராகலை மாவட்டத்திற்காக 5 சுயேச்சைக் குழுக்களும் பதுளை மாவட்டத்தில் ஒரு சுயேச்சைக் குழுவும் கட்டுப்பணம் செலுத்தியிருப்பதாக தேர்தல்கள் செயலகம் தகவல் தெரிவித்துள்ளது. (6)

## இலங். பாதுகாப்பு படையினருக்கு 2015 வரை பயிற்சியளிக்கப்படும்

### ஸ்கொட்லாந்து உறுதி

(கொழும்பு)

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் விவகாரம் தொடர்பில் எதிர்ப்புக்கள் தோன்றியுள்ள போதும், இலங்கை பாதுகாப்பு படையினருக்கு ஸ்கொட்லாந்து நாட்டின் பொலிஸாரினால் வழங்கப்படும் பயிற்சி 2015 வரை தொடரும் என்று ஸ்கொட்லாந்து பொலிஸ் உறுதியளித்துள்ளது.

2007 ஆம் ஆண்டிலிருந்து கடந்த வருடம் வரை சுமார் 3 ஆயிரத்து 500 இலங்கை பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சில சிரேஷ்ட தளபதிகள் ஸ்கொட்லாந்து பொலிஸ் கல்லூரியில் பயிற்சிகளை பெற்றுக்கொண்டனர்.

சர்வதேச பொலிஸ் பயிற்சியின் தரம் என்ற குறிக்கோளின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு வெளிநாட்டு அலுவலகங்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டமானது சிரேஷ்ட அதிகாரிகளுக்கு ஒரு புதிய தலைமைத்துவ கொள்கையின்ன முன்னேற்றமடைய செய்யும் என்று ஸ்கொட்லாந்து பொலிஸ் கல்லூரியின் முன்னாள் கல்வி மற்றும் மேம்பாட்டு தலைவர் புரூஸ் மிலின் தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுநலவாய விளையாட்டுக்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முக்கியமான தலைமைத்துவ பங்கினை வகிப்பது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (6)

## மஹிந்தவின் வெற்றிக்கு சுதந்திர கட்சியே காரணம்

### பங்காளிகளல்ல -சிறிபால டி சில்வா



(கொழும்ப)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாரம்பரிய ஆதரவாளர்களின் பங்களிப்பே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றிகளுக்கு முக்கிய காரணம் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடிமட்ட தொண்டர்களே இன்றைய அரசாங்கத்தை உருவாக்க முக்கிய காரணம் எனவும் அரசாங்கத்தின் பங்காளிகள் இதற்கு காரணம் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரங்களில் இருந்து ஒதுங்கி கொள்ள அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் எடுத்துள்ள தீர்மானம் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகள் தேர்தலில் தமது விருப்பத்திற்கு அமைய செயற்படும் சுதந்திரம் இருப்பதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (6)

## அச்சுறுத்துபவர்கள் டோகா பிரிவினரே

கொழும்பு நோக்கி கடந்த வாரம் பயணம் செய்து கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் மீது சுமத்தப்பட்ட கஞ்சா குற்றச்சாட்டு, அனைத்திற்கும் தலைமை தாங்குபவர்கள் இராணுவத்தின் கீழ் இயங்கும் டோகா என்ற படைப்பிரிவினர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறிப்பிட்ட படைப்பிரிவினரே பின்னர் சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளருக்கு தொலைபேசி மூலமாக அச்சுறுத்தல் விடுத்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவை மையமாக கொண்டு செயற்படும் டோகாவை சேர்ந்தவரே தனக்கு அச்சுறுத்தல் விடுத்ததாக சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டாளர் சுனில் ஜயசேகர தெரிவித்துள்ளார். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | Paavanaham.org

# நீதிதேவதை சிரிக்கிறாள்!

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இருந்தபோது குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவருக்கு தமிழகத்தைச் சேர்ந்த ஒரு கட்சியின் நிர்ப்பந்தம் காரணமாக பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டது என உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு அண்மையில் குற்றம் சாட்டியுள்ளார்.

ஆனால், தி.மு.க தலைவர் கருணாநிதி அவசரம் அவசரமாக அதற்கு பதில் அறிக்கை வெளியிட்டார். முரண்பாடுகளின் மொத்த உருவம் மார்க்கண்டேய கட்ஜு, காங்கிரஸ் ஆட்சியில் பதவிகளைப் பெற்றுக்கொண்டு தற்போது ஆட்சி முடிந்தவுடன் அதன்மீது குறை சொல்லுபவர் எப்படிப்பட்டவர் என்பதை நாடறியும்.

கட்ஜுவின் கடந்தகால நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது முன்னுக்குப்பின் முரணாகப் பேசக்கூடியவர். நீதிபதிக்கே உரிய நடுநிலை தவறி பொறுமை இழந்து கருத்துச் சொல்லக்கூடியவர். கோபக்காரர், காலையில் கூறியதையே மாலையில் மறுப்பவர் என்றெல்லாம் மிகக் கடுமையாகச் சாடி கருணாநிதி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

கட்ஜுவின் குற்றச்சாட்டுக்கு ஆளான நீதிபதி எதுவும் பதிலளிக்கவில்லை. அவருக்கு வராத கோபமும் ஆத்திரமும் கருணாநிதிக்கு வருவது ஏன் என்ற கேள்விக்கு உரிய விடையை காங்கிரஸ் அரசின் சட்டத்துறை அமைச்சராக இருந்த பரத்வாஜ் செய்தியாளர்களுக்கு அளித்த நேர்காணலின் மூலம் நாம் புரிந்துகொள்ள முடியும்.

ஜூலை 23 ஆம் திகதி பரத்வாஜ் பின்வருமாறு கூறினார். சர்ச்சைக்குள்ளான கூடுதல் நீதிபதிக்கு எதிராக மத்திய உளவுத்துறை விசாரணை நிலுவையில் இருந்த காலத்தில்தான், பணிநீடிப்பு அளிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் முக்கிய கட்சியாக அப்போது தி.மு.க இருந்தது.

மத்திய அமைச்சரும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் என்னைச் சந்தித்தனர். கூடுதல் நீதிபதிக்குப் பணி நீட்டிப்பு வழங்குவதை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு விரும்பவில்லை. மேலும் அக்கூடுதல் நீதிபதி தலித் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவரை தனிமைப்படுத்த கட்ஜு முயல்கிறார் என அவர்கள் குற்றம் சாட்டினர்.

எனவே, உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி லஹோதி அவர்களுக்கு நான் எழுதிய கடிதத்தில், சம்பந்தப்பட்ட கூடுதல் நீதிபதிக்குப் பணி நீட்டிப்பு வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டேன்.

அதாவது, இதன்மூலம் கீழ்க்கண்ட மூன்று உண்மைகள் சம்பந்தப்பட்டவர்களால் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றன.

முதலாவதாக, குற்றச்சாட்டுக்கு உள்ளான கூடுதல் நீதிபதியான அசோக்குமாருக்கு பணி நீடிப்பு வழங்க சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி கட்ஜு விரும்பவில்லை.

இரண்டாவது, தி.மு.கவைச் சேர்ந்த மத்திய அமைச்சரும் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்களும் மத்திய சட்ட அமைச்சர் பரத்வாஜை சந்தித்து நீதிபதி அசோக்குமாருக்கு பதவி நீட்டிப்பு வழங்கவேண்டும் என வற்புறுத்தியுள்ளனர்.

மூன்றாவது, பரத்வாஜை நீதிபதி அசோக்குமாருக்குப் பதவி நீட்டிப்பு வழங்குமாறு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி லஹோதிக்கு அலுவல்பூர்வமாகக் கடிதம் எழுதியிருக்கிறார்.

மேற்கண்ட உண்மைகளின் மூலம் நீதிபதி அசோக்குமாருக்கு பதவி நீட்டிப்பு வழங்கூ வேண்டும் என கூட்டணிக் கட்சியா்ன தி.மு.க தரப்பில் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு அதற்கு மத்திய அரசும் பணிந்து நீதிபதி அசோக்குமாருக்குப் பணி நீட்டிப்பு அளித்துள்ளது என்பது நீருபிக்கப்பட்டுள்ளது.

அப்போதைய பிரதமரான மன்மோகன்சிங் இந்த விவகாரத்தில் நிகழ்ந்த உண்மைகளை பரத்வாஜ் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். கூடுதலாகத் தெரிவிக்க எதுவும் இல்லை என்று கூறி பரத்வாஜ் கூறியதை உறுதிப் படுத்தியிருக்கிறார்.

தற்போதைய சட்ட அமைச்சர் ரவி சங்கர் பிரசாத், நாடாளுமன்றத்தில் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார்.

2003 ஆம் ஆண்டு நீதிபதிகளை நியமிப்பதற்கான உச்சநீதிமன்ற ஆணையம் நீதிபதி அசோக்குமாருக்கு பதவி நீட்டிப்பு வழங்குவது குறித்து பல தயக்கங்களைக் கொண்டிருந்தது. எனவே, இது தொடர்பாக பல விசாரணைகளை அவர்கள் மேற்கொண்டார்கள். இறுதியாக சம்பந்தப்பட்ட நீதிபதியை நிரந்தரமாக்குவதில்லை என ஆணையம் முடிபு செய்தது.

ஆனாலும் நீதிபதி அசோக்குமாரின் பதவியை நிரந்தரம் செய்வது குறித்த பிரச்சினை ஏன் மேலும் ஆராயப் படவில்லை என பிரதமர் மன்மோகன் சிங்கின் அலுவலகத்திலிருந்து விளக்கம் கேட்கப்பட்டது. எனவே மீண்டும் நீதிபதிகளை நியமிக்கும் ஆணையம் மறுபடியும் கூடி அவரை பதவி நிரந்தரம் செய்வதில்லை என முடிபு செய்தது.

அதைத் தொடர்ந்து சட்டத்துறை அமைச்சரின் சார்பில் நீதித்துறையிலிருந்து அனுப்பப்பட்ட குறிப்பிற்கிணங்க மீண்டும் ஆணையம் கூடி அவருக்கு பதவி நீட்டிப்புத் தர முடிபு செய்தது. தற்போது சம்பந்தப்பட்ட நீதிபதியும் அவரை நிரந்தரம் செய்த ஆணையத்தின் நீதிபதிகளும் தாங்கள் வகித்த பதவிகளிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டனர் என்று கூறினார்.

இதற்கிடையில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிகளாக இருந்த லஹோதி, பாலகிருஷ்ணன் ஆகியோர் இப்பிரச்சினையை இவ்வளவு நாட்கள் கழித்து எழுப்பிய கட்ஜுவுக்கு உள்நோக்கம் இருப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

இவர்களுக்குப் பதில் அளித்து கட்ஜு விடுத்துள்ள அறிக்கையில் பின்வரும் ஆறு கேள்விகளை எழுப்பியுள்ளார்.

1.சென்னை உயர்நீதிமன்றக் கூடுதல் நீதிபதியாக இருந்தவர் மீதான புகார்கள் தொடர்பாக நான் முதன் முதலில் சென்னையிலிருந்து லஹோதிக்கு கடிதம் எழுதியதுடன், அக்கடிதத்தில் அந்தக் கூடுதல் நீதிபதி தொடர்பாக ரகசிய உளவுத்துறை விசாரணை அறிக்கை பெறுமாறு வலியுறுத்தினேன். மேலும் டில்லியில் லஹோதியை சந்தித்த எனது கோரிக்கையை மீண்டும் வற்புறுத்தினேன். அது உண்மையா இல்லையா?



2.எனது கோரிக்கையின்படி அந்தக் கூடுதல் நீதிபதி தொடர்பாக ரகசிய உளவுத்துறை விசாரணைக்கு லஹோதி உத்தரவிட்டது உண்மையா, இல்லையா?

3.தில்லியில் லஹோதியை நேரில் சந்தித்த பின்னர் சென்னை திரும்பிய என்னை, அவர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நான் தெரிவித்த புகார்கள் அனைத்தும் உண்மையென ரகசிய உளவு விசாரணையில் தெரிய வந்ததாகக் குறிப்பிட்டது உண்மையா, இல்லையா?

4.உளவு அறிக்கையில் கூடுதல் நீதிபதிக்கு எதிரான தகவல்கள் இடம் பெற்றிருந்ததால், நீதிபதிகள் தேர்வுக் குழுவுக்கு தலைமை தாங்கிய அப்போதைய உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியான லஹோதி அக்குழுவில் இடம் பெற்றிருந்த நீதிபதிகள் சபர்வால், ரூமாபால் ஆகியோர் மத்திய அரசுக்கு அனுப்பிய பரிந்துரையில் கூடுதல் நீதிபதிக்குப் பணி நீட்டிப்பு வழங்க வேண்டாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததே அது உண்மையா, இல்லையா?

5.மேற்கண்ட பரிந்துரையைச் செய்த பின்னர், தேர்வுக் குழுவில் இடம் பெற்றிருந்த மற்ற இரு நீதிபதிகளைக் கலந்தாலோசிக்காமல், லஹோதி தன்னிச்சையாக மத்திய அரசுக்கு அனுப்பிய கடிதத்தில் கூடுதல் நீதிபதிக்கு ஓராண்டு பணி நீட்டிப்பு அளிக்கலாம் என்று பரிந்துரை செய்தது உண்மையா, இல்லையா?

6.மத்திய உளவுத்துறை அறிக்கையில் முரண்பட்ட தகவல் இடம்பெற்ற பின்னரும் ஊழல் புகாருக்கு ஆளான நீதிபதிக்கு மேலும் ஓராண்டு பணி நீட்டிப்பு வழங்க லஹோதி பரிந்துரை செய்தது ஏன்?

அவரின் கேள்விகளுக்கு நீதிபதிகள் லஹோதி, பாலகிருஷ்ணன் ஆகியோர் என்ன பதில்கள் அளிக்கப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துப் பார்க்க வேண்டும்.

ஆனால், இந்தக் கேள்விகள் மக்களிடம் பல உண்மைகளைக் கொண்டு போய் சேர்த்திருக்கின்றன. நமது நீதிபதிகள் நியமனத்திலும் அவர்களின் பணியினை நிரந்தரப்படுத்துவதிலும் அரசியல்வாதிகளின் தலையீடு இருந்திருக்கிறது என்பது உறுதியாகியிருக்கிறது.

நீதிதேவதை சிரிக்கிறாள். தவறு இழைக்கும் நீதிபதிகளைப் பார்த்தா? அவர்களுக்குத் துணை நிற்கும் அரசியல்வாதிகளைப் பார்த்தா?

நீதிதேவதையின் இந்தச் சிரிப்பு வேறு சில கேள்விகளை எழுப்பியுள்ளன.

1.தனி நபரைக் காப்பாற்றவும் அவரது பதவியை நிரந்தரம் செய்யவும் மத்திய அரசுக்கு நெருக்குதல் தந்து அதை நிறைவேற்றிக்கொண்ட தி.மு.க 2009 ஆம் ஆண்டில் இலங்கையில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்படும் அபாயகரமான காலகட்டத்தில் இதைப்போல மத்திய அரசுக்கு நெருக்குதல் தந்து போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி அந்த மக்களைக் காப்பாற்றியிருந்திருக்க முடியுமே; அதை ஏன் செய்யவில்லை?

2. நீதிபதி அசோக்குமார் ஆந்திரத்திற்கு மாற்றப்பட்டது ஏன்? ஆந்திர மாநிலத்திலுள்ள சித்தூர் மாவட்ட நீதிமன்றத்தில் தி.மு.க முன்னாள் அமைச்சர் தா.கிருட்டிணன் கொலை வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அதில் தி.மு.க தலைவர் கருணாநிதியின் மகன் அழகிரி குற்றம் சாட்டப்பட்டிருந்தார். இந்த வழக்கிலிருந்து அழகிரியைக் காப்பாற்றும் நோக்கத்துடன்தான் நீதிபதி அசோக்குமார் ஆந்திரத்திற்கு மாற்றப்பட்டாரா?

3. ஒருலட்சத்து எழுபத்தாறாயிரம் கோடி ரூபாய் சூறையாடப்பட்ட 2 ஜி ஊழல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதுதான் இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்களை சிங்கள இராணுவம் சுற்றிவளைத்துக் கொண்டது. அவர்களின் ஓலக்குரலுக்கு செவிசாய்த்து 1,40,000 தமிழர்களை காப்பாற்றுவதைவிட 2 ஜி பணபேரம் முக்கியமானதாக சம்பந்தப்பட்டவர்களால் கருதப்பட்டதா?

மேற்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டிய கடமை தி.மு.கவிற்கு உண்டு. -பழ.நெடுமாறன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பு கேட்பதற்கு தான்தான் காரணமாம்

## சுப்பிரமணியசுவாமி தெரிவிப்பு



(சென்னை)

தமிழக முதல்வர் பற்றி வெளியிடப்பட்ட அவதூறு கட்டுரை குறித்து, தான் இலங்கை அரசிடம் பேசியதாகவும், அதன் பின்னரே இலங்கை அரசு மன்னிப்பு கோரியதாகவும் சுப்பிரமணியசுவாமி கூறினார்.

பாரதிய ஜனதா கட்சியின் ஒரு பிரிவான பாரதிய கிசான் (விவசாயிகள்) சங்கம் சார்பில் தேசிய நதிநீர் வழிச்சாலை பற்றிய கருத்தரங்கு மதுரையில் நடந்தது. கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக முன்னாள் மத்திய அமைச்சரும், பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவருமான சுப்பிரமணிய சுவாமி கலந்து கொண்டார். முன்னதாக அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

இதன்போது இலங்கை இராணுவ இணையத்தளத்தில் தமிழக முதல்வரை பற்றி வெளியிடப்பட்ட அவதூறான கட்டுரை குறித்து நான் இலங்கை அரசிடம் பேசினேன். எனது பேச்சை கேட்ட பின்னர் இலங்கை அரசு மன்னிப்பு கேட்டது. இந்த தகவலை இலங்கை அரசு வெளியிடவில்லை. ஒரு பத்திரிக்கை தான் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் பாகிஸ்தான், சீனா ஊடுருவலை தடுக்க, மத்திய அரசு இலங்கை அரசிடம் சுமுக உறவு வைத்து வருகிறது. இலங்கையில் நடைபெறும் இராணுவ மாநாட்டில் நான் கலந்து கொள்ள செல்கிறேன். அப்போது இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களை சந்திக்க இருப்பதாக நான் கூறினேன்.

அந்த மாநாட்டில் சர்வதேச தலைவர்கள் பலர் கலந்து கொள்ள வருவதால், தனியாக இலங்கை வருமாறு கூறியுள்ளனர். எனவே தமிழர்களை பார்க்க மீண்டும் இலங்கை செல்வேன். (6)

# பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மாற்றம்

## பொதுபல சேனா காரணமா?

(கொழும்பு)

கொழும்பு பிரதேசத்திற்கு பொறுப்பாக பணியாற்றிய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுமித் எதிரிசிங்க, களுத்துறை மற்றும் பாணந்துறை பிரதேசங்களுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

களுத்துறை மற்றும் பாணந்துறை பிரதேசங்களுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபராக பணியாற்றிய வீ. இந்திரன் பொலிஸ் தலைமையகத்தின் நலன்புரி நடவடிக்கைகளுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சுமித் எதிரிசிங்கவின் இடமாற்றத்தை அடுத்து கல்கிசை மற்றும் நுகேகொட பிரதேசங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபராக ஜீ.டி.ஏ.கே. சேனாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

அளுத்கம, பேருவளை மற்றும் தர்கா நகர் பிரதேசங்களில் அண்மையில் ஏற்பட்ட இன மோதல்களுடன் தொடர்புடைய பொதுபல சேனா அமைப்பின் 13 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை விடுவிக்குமாறு மேலிடத்தில் இருந்து உத்தரவிடப்பட்ட போதும், அவர்களை விடுவிக்க பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திரன் மறுத்திருந்தார்.

இதனையடுத்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் மற்றுமொரு பொலிஸ் உயர் அதிகாரி தலையிட்டு பொதுபல சேனா அமைப்புடன் தொடர்புடையவர்களை விடுதலை செய்ததாக கூறப்பட்டது.

இதனடிப்படையிலேயே பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திரனின் இடமாற்றம் நடந்துள்ளதாக பொலிஸ் தரப்பில் பேசப்பட்டு வருகிறது. (6)

## தாக்கப்பட்டதாக இளைஞன் முறையீடு!

(கொழும்பு)

திருகோணமலை குச்சவெளி பிரதேச சபையின் தலைவரால் இளைஞன் ஒருவர் தாக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பிரதேச சபைத் தலைவரின் அலுவலகத்திற்கு தாம் அழைக்கப்பட்டு தாக்கப்பட்டதாக குறித்த இளைஞன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை, இந்த குற்றச்சாட்டு தொடர்பில் குச்சவெளி பிரதேச சபையின் தலைவர் ஏ.முபாரக்கிடம் வினவியபோது, பொய்யான முறையில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தமது உறவினரான இளைஞன் ஒருவரே இந்த குற்றச்சாட்டினை சுமத்தியுள்ளதாகவும் அவர் கூறினார். (6)

# புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்துகின்றது அரசாங்கம்

## இலங்கை மீது ஐ.நா. குற்றச்சாட்டு

(கொழும்பு)

புகலிடம் கோரும் பாகிஸ்தானியர்களை இலங்கை அரசாங்கம் சட்டவிரோதமான ரீதியில் நாடு கடத்துவதாக ஐக்கிய நடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே இந் நடவடிக்கையை இலங்கை கைவிட வேண்டும் என அந்நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் 9 ஆம் திகதி முதல் இலங்கையில் புகலிடம் கோரியுள்ள பாகிஸ்தானியர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இதுவரையில் 214 பாகிஸ்தானியர்களை இலங்கை அதிகாரிகள் கைது செய்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்துவது தடை செய்யப்பட்ட ஓர் விடயமாகும் என குறிப்பிட் டுள்ளது.

பலவந்தமான அடிப்படையில் புகலிடக் கோரிக்கையாளர்களை அரசாங்கம் நாடு கடத்தக்கூடாது என தெரிவித்துள்ளது.

சித்திரவதைகளுக்கு எதிரான சர்வதேச பிரகடனத்தின் அடிப்படையில் பலவந்தமான அடிப்படையில் புகலிடக் கோரிக்கையாளர்கள் சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ளது. (6)

# இன்று ஒரு தகவல்

## இழப்பது எப்படி?

ஒருவன் ராமகிருஷ்ணரைத் தேடி வந்தான். அவன் ஆயிரம் பொற்காசுகள் வைத்திருந்தான். அதை அவரிடம் கொடுத்து இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மிகவும் பணிவாகக் கேட்டுக்கொண்டான். அவர் பார்த்தார்.

"இது எனக்குத் தேவை இல்லை. ஆனாலும் உன் மனதைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. அதனால் நீ கொடுப்பதை வாங்கிக் கொள்கிறேன்" என்றார். வாங்கிக் கொண்டார். அதன் பின்னர் "இதோ பார் இனிமேல் இது எல்லாம் என்னுடையது தானே" என்றார்.

"ஆமாம் அதையெல்லாம் நான் உங்களுக்கே கொடுத்து விட்டேன்" என்றான்.

"சரி... இப்பொழுது நீ எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்" என்றார்.

"என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்" என்றார். "இந்த நாணயங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு போய் கங்கை நதியில் எறிந்து விட்டுவா!" என்றார்.

இவனுக்கோ அதிர்ச்சி. என்ன செய்வது. இனிமேல் அது முடியாது என்றும் சொல்ல முடியாது. ஏனெனில், அந்த நாணயங்களையெல்லாம் அவருக்கே கொடுத்து விட்டான். இனிமேல் அதெல்லாம் இவனுடையது அல்ல.

பேசாமல் அவ்வளவையும் அள்ளிக்கொண்டு ஆற்றங்கரைக்குப் போனான். போனவன் திரும்பி வரவேயில்லை. ராமகிருஷ்ணருக்கு சந்தேகம் வந்துவிட்டது. அங்கிருந்த ஒருவரை அவன் எங்கே? அவனுக்கு என்ன நடந்தது? என்று போய் பார்த்துவிட்டு வா என்று அனுப்பினார். அவர் போய்ப் பார்த்துவிட்டு வந்து விபரத்தைக் கூறினார்.

"அவன் கங்கைக்கரையில் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு நாணயமாக ஒன்று இரண்டு என்று எண்ணி வீசிக்கொண்டிருக்கிறான். அவனைச் சுற்றி ஒரு கும்பல் நின்றுகொண்டு அவனைத் தடுத்துக் கொண்டிருக்கிறது" என்றார். இதைக் கேட்டதும் ராமகிருஷ்ணர் அங்கு புறப்பட்டுச் சென்றார்.

"என்ன இப்படி பண்ணிக் கொண்டிருக்கிறாய்? நான் உன்னை அந்த நாணயங்களை கங்கையில் வீசி எறியச் சொன்னேன். நீ ஏன் அதை எண்ணிக் கொண்டிருக்கிறாய்?" என்றார்.

பழக்கம்தான் காரணம். நான் ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக சேமித்து வைத்தேன். இப்பொழுது என்னிடம் நிறையவே இருக்கிறது. உங்களுக்கு ஆயிரம் நாணயங்களை கொடுக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை என்றான். அதற்கு ராமகிருஷ்ணர்,

"ஒரே நேரத்தில் எல்லாவற்றையும் சம்பாதித்திருந்தால் நீ எண்ணுவது பொருத்தமாக இருக்கும். எல்லாவற்றையும் இழக்கும்போது எண்ணிக் கொண்டு இருப்பது என்பது சரியான மூடத்தனம். ஒரே தடவையாக எல்லாவற்றையும் தூக்கி எறிந்து விடு" என்றார்.

இங்கு இழப்பது என்பது ஓர் உயர்ந்த நிலை . இதை நம்முடைய யதார்த்த வாழ்க்கையில் சம்பந்தப்படுத்தி பார்த்து குழம்பிக் கொண்டிருக்கக்கூடாது. இழக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு இருக்கும் காசையெல்லாம் ஆற்றிலும் குளத்திலும் எறிந்து கொண்டிருந்தால் பார்ப்பவர்கள் சந்தேகப்படுவார்கள்.

இதில் நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், எதையாவது ஒன்றை இன்னொருவருக்கு கொடுக்க வேண்டும் என்று விரும்பினால் அதை மனப்பூர்வமாக கொடுக்க வேண்டும். கொடுத்துவிட்டு அதையே நினைத்துக் கொண்டிருக்கக் கூடாது.

நம்ம ஆள் ஒருவர் ஒரு நூறு ரூபாய் தாளை எடுத்து தனது நண்பர் ஒருவரிடம் கொடுத்து "இது உனக்குத் தான் வைத்துக்கொள்" என்றார். அவர் பார்த்தார்.

"இது இனிமேல் எனக்குத்தானே சொந்தம்?" என்றார்.

"ஆமாம்" என்றார்.

"அப்படியானால் எனக்காக நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும்" என்றார்.

"சொல்லுங்கள் செய்கிறேன்" என்றார்.

"இந்த நூறு ரூபாய் நோட்டை தீ வைத்து கொளுத்திவிடு" என்றார்.

இவர் அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்தார்.

அதற்கு அவர், "நீ எனக்கு அன்பாக கொடுத்த இது கள்ள நோட்டு என்று எனக்குத் தெரியும். சீக்கிரம் கொளுத்து" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜதந்திர விளைவுகளை அவதூறு கட்டுரை ஏற்படுத்தும்

## ஆங்கில ஊடகம் எச்சரிக்கை



இலங்கை படைத்துறை அமைச்சின் இணையத்தளத்தில் இந்தியப் பிரதமர் மற்றும் தமிழக முதலமைச்சர் ஆகியோரை இழிவுபடுத்தும் வகையில் வெளியிடப்பட்ட கட்டுரை இராஜதந்திர விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை படைத்துறை அமைச்சின் இணையத்தளத்தில் இந்தியப் பிரதமர் மற்றும் தமிழக முதலமைச்சர் ஆகியோரை இழிவுபடுத்தும் வகையில் வெளியான சர்ச்சைகுரிய இந்தக் கட்டுரை சேனாலி வாதுகே என்பவரால் எழுதப்பட்டிருந்தது.

இந்தக் கட்டுரை தொடர்பில் இந்தியா வெளியிட்ட எதிர்ப்பை அடுத்து, படைத்துறை அமைச்சு தனது இணையத்தளத்தில் இருந்து அதனை நீக்கியதுடன், நிபந்தனையற்ற மன்னிப்பையும் கோரியது.

இது தொடர்பில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா இலங்கை வெளிவிவகாரச் செயலாளர் சேனுகா செனிவிரத்னவிடம் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்த பின்னரே, படைத்துறை அமைச்சின் இணையத்தளத்தில் மன்னிப்புக் கோரப்பட்டது.

இது தரக்குறைவான கட்டுரை என்று புதுடில்லி குறிப்பிட்டுள்ளமை இராஜதந்திர விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் நியூயோர்க்கில் அடுத்த மாதம் இடம்பெறும் ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கும் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பேசலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம் கடந்த வெள்ளிக்கிழமை தனது நியமனக் கடிதத்தை கையளித்த இலங்கையின் புதிய தூதுவர் சுதர்சன் செனிவிரத்ன இது தொடர்பில் மன்னிப்புக் கோரியதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது. (6)

# ஆட்சி மாற்றம் நிரந்தர தீர்வை பெற்றுத்தராது



இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்படுவது மாத்திரம் தீர்வாக இருக்காது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையினால் தமக்கு நீதி கிடைக்கும் என்று தமிழ் மக்கள் நம்பவில்லை.

எனினும் வேறு வழியின்றி ஐககிய நாடுகள் சபையுடன் இணைந்து செயற்பட வேண்டிய நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை சில நாடுகள் தமது அக்கறையை கருத்திற் கொண்டே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சித் திட்டத்தை இலங்கைக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் கஜேந் திரகுமார் கருத்துரைத்துள்ளார்.

போரின்போது நிகழ்ந்த உரிமை மீறல்கள் குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொள்ளும் விசாரணையை ஏற்கமுடியாது. இதற்காக அரசாங்கம் மாறினால் விசாரணையின் முடிவுகளில் மாற்றம் வரும் என்றும் கூறமுடியாது.

ஏனெனில் தெற்கில் சில இடதுசாரி கட்சிகளை தவிர ஏனைய சிங்கள கட்சிகள் படையினர் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கொள்கையை கொண்டிருப்பதாகும் என்று கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்தார். (6)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

### சொற்பொழிவு

நல்லூர்க்கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனைச் சொற்பொழிவு ,கலைநிகழ்வுகள் என்பன உற்சவ காலங்களில் தினமும் பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டப முன்றிலில் நடைபெற்று வருகின்றன.

இன்றைய நிகழ்வுகளாக சைவப்புலவர் கந்தசத்தியதாஸன் வழங்கும் கால்பட்டழிந்தது தலையெழுத்து எனும் தலைப்பிலான சொற்பொழிவும் நெட்டிலிப்பாய் ஸ்ரீகணேசா அறநெறிப்பாடசாலை ,திடற்புலம் நரசிங்க வைரவர் அறநெறிப்பாடசாலை, குப்பிளான் கன்னிமார் கௌரி அம்பாள் அறநெறிப்பாடசாலை, வண்ணார் பண்ணை இலக்கண சுவாமிகள் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

### இசையரங்கு

நல்லூர்க்கந்தனின் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த இசையரங்கில்பாடல் எஸ்.சிவானுஜா, வயலின் கெ.குகபரன், மிருதங்கம் எஸ்.அகிலன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

### இசை நிகழ்ச்சி


நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்படும் தெய்வீக இசை நிகழ்ச்சி தினமும் பிற்பகல் 4.30 மணி தொடக்கம் 6 மணிவரை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்று வருகின்றது.இதன் இன்றைய நிகழ்வாக கொழும்புத்துறை கீதவாஹினி கலா மன்றம் வழங்கும் பண்ணிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாடலை சிவதர்சிகா சிவராஜாவும் வயலினை திருமதி கிருஷ்னாலினி அகிலனும் மிருதங்கம் கண்ணதாசன் இசைநிலவனும் வழங்கவுள்ளனர்.

### கம்பராமாயணம் இசைப் பேருரை

நல்லூர் கந்தப்பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள கம்பராமாயண தெய்வீகத் தொடர் இசைப்பேருரை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் 7.30மணிவரை நல்லை ஆதீன குரு மூர்த்தி ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (6)

# நல்லூரான் திருவடிக்கு இன்று ஐந்தாம் திருவிழா



## பெருங்கோயில் கொண்டருளும் நல்லைக்கந்தனே

இந்து சமுத்திரத்தின் நித்திலமாம்
ஈழ மணித்திருநாட்டினிலே
வடபுலத்தின் கண் யாழ்ப்பாணத்திலே
தலைநகர் நல்லூரிலே புகழ்பூத்து
பெருங்கோயில் கொண்டருளும்
நல்லைக்கந்தனே உன் திருவிழா
நல்விழா' கோலமாய் எமக்கு
நல்லதீர்ப்பை வழங்க இறைஞ்சுகின்றோம்

செல்வி. ச.வைஷ்ணவி, கொழும்பு

## போற்றுவோம் நல்லூரான் பாதம்

இயற்கை வளமும் செழிப்பும் பொருந்திய
நல்லை நகர் வீதியில்
அமைந்திருக்கும் எம் நல்லூரான்
பாதம் போற்றுவோம்
உன்னைப் பார்த்திட நாம்
அலைகடல் போல் திரண்டிடுவோம்
எம்மைக் காக்க நீ ஓடோடி வந்திடுவாய்
நம் நல்லைக்கந்தா

கு.ரேவதி, உரும்பிராய் சை.த.வி

## நல்லூரான் திருவடிக்கு

அன்பருக்கு அன்பரே வாவா சண்முகா
ஆறுபடை வீடுடையாய் வாவா சண்முகா
இன்பமயஜோதியே வாவா சண்முகா
ஈசனுமை பாலகனே வாவா சண்முகா
உலகநாதன் மருகோனே வாவா சண்முகா
ஊமைக்கருள் புரிந்தோனே வாவா சண்முகா

த.பிரசாந், பருத்தித்துறை

## உன் வரம் வேண்டும்

யாழ். மண்ணின் நடுவில் வீற்றிருந்து
அருள்பாலிக்கும் காந்தசக்தி படைத்தவனே
உன் திருமுகம் காண எனக்கும் ஆசையுண்டு
எனக்கு ஒரு வரம்கொடு
உன் தரிசனம் காண!

எம்.சுபத்ரா,ஏழாலை

## நல்லூர்க் கந்தனே...!

நல்லூரிலே வீற்றிருக்கும் ஆறுபடை முருகனே
நம்பி வருபவர்க்கெல்லாம் அருள்புரியும் கந்தனே
உம்மைத் தேடி வந்தோமே முருகா
எமக்கு அருள்தாரும் முருகா
உன் சிறப்பை கூற பல ஆண்டுகள்
வேண்டுமே என் கந்தனே
கந்தா கடம்பா கதிர்வேலா என்று
பக்தர்கள் உன்னை பல நாமங்களால் துதிக்க
உன்னை தேடிவரும் அடியவர் கூட்டத்தை
கண்திறந்து பாரும் என் முருகனே

ர.துர்க்கா, யா/ உரும்பிராய் சை.த.வி

## வாரீர் சகிகளே...

வாரீர் சகிகளே நல்லூரான்- திரு
அடிதனைப் பாடி ஆடுவோம்
செந்தூர் கந்தன் செவ்வேள் குமரன்
நல்லூர் பதியுறை நாயகன் முருகனிடம் வாரீர்
நற்றமிழ் தலைமகன் நல்லைக்கந்தன்
நானிலம்போற்றும் சிவனின் புதல்வனிடம் வாரீர்
அருள்தரும் சரவண பவமெனும் முருகா
அழகொளிர் நல்லைப் பதியுறை குமரனிடம் வாரீர்

சுபாஷினி, பிரணவன்

## நல்லைக் கந்தன் நனிவெண்பா

சேவற்கொடி பறக்கச்சிங்காரவேலுடனே
காவல்செயவந்தருளுங்கதிர்வேலன்–ஆவலுடன்
எந்தவினை யானாலும் எடுத்தியம்பப் பதிநல்லூர்க்
கந்தனுளான் வந்து கதை

கலாபூஷணம் சந்தக் கவிஞர் நவ.பாலகோபால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அலுவலக பாதுகாப்பு அதிகரிப்பு

(திருச்சி)

திருச்சியிலுள்ள ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையின் ஆசன பதிவு காரியாலயத்துக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

திருச்சியிலுள்ள குறித்த அலுவலகத்தின் மீது கடந்த சனிக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டதை அடுத்து அங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



உதவி பொலிஸ் அதிகாரி தலைமையிலான 9 பேர் அடங்கிய குழு குறித்த அலுவலகத்துக்கு முன்னால் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, இலங்கை பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளத்தில் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தொடர்பில் அவதூறான செய்தி வெளியிடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சென்னையில் உள்ள இலங்கை துணை தூதரகத்திற்கு முன்னால் தமிழ் திரையுலகினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (6)

# இந்திய தேசத்தையே இழிவுபடுத்தும் செயல்

## ஈஸ்வரன் கண்டனம்

ஒரு மாநிலத்தின் முதல்வர் என்கிற முறையில் மத்திய அரசின் பிரதமருக்கு கடிதம் எழுதுவது ஒரு ஜனநாயக கடமை. இந்திய ஜனநாயகத்தை கொச்சைப்படுத்தும் வகையில் தமது அதிகாரபூர்வ இணையத்தளத்தில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சகம் கட்டுரை வெளியிட்டிருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. மேலும இந்திய நாட்டின் பிரதமரை இழிவுபடுத்துகிறது.

இத்தகைய செயல் ஒட்டு மொத்த இந்திய தேசத்தையும் இழிவுபடுத்துவதாகும்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய பிரதமரையும், தமிழக முதல்வரையும் இழிவுபடுத்தி பேசுகிற இலங்கைக்கு தக்க பாடம் புகட்டும் வகையில் இலங்கையுடனான உறவுகளை இந்திய அரசு துண்டித்து தொடர்ந்து இந்திய. தமிழக மீனவர்களை கைது செய்து கொண்டிருக்கின்ற இலங்கை அரசுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும்.

இந்திய மீனவர்களையும், இந்திய தேசத்தின் தன்மானத்தையும் காப்பாற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். (6)

# இந்தியாவின் குற்றச்சாட்டை முற்றாக மறுத்த பாகிஸ்தான்

(பக்தாத்)

பாகிஸ்தானிய புலனாய்வு பிரிவின் நடவடிக்கைகளுடன் தமது உயர்ஸதானிகரக அதிகாரி தொடர்பு கொண்டிருப்பதாக இந்தியா சுமத்தி வரும் குற்றச்சாட்டை பாகிஸ்தான் மறுத்துள்ளது.

2012 ஆம் ஆண்டு முதல் இந்த அதிகாரி. இந்தியாவினால் அவதானிக்கப்பட்டு வருவதாக இந்திய செய்தித்தளம் ஒன்று தெரிவித்துளளது.

அமிர் சுபைர் சித்தீக் என்ற அதிகாரியே இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும் இதனை மறுத்துள்ள பாகிஸ்தானின் இலங்கை உயர்ஸ்தானிகரகம்பாகிஸ்தானின்நற்பெய ருக்கு களங்கம் விளைவிக்கும் வகையிலேயே இந்த பிரசாரம் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை குற்றம் சுமத்தப்பட்டுள்ள அதிகாரி மாற்றம் பெற்றுள்ளமை குறித்து தகவல் வெளியிட்ட உயர்ஸ்தானிகரக பேச்சாளர் ஒருவர், குறித்த அதிகாரியின் உடன்படிக்கை காலம் முடிவடைந்த நிலையிலேயே அவர் பாகிஸ்தானுக்கு சென்றுள்ளார் என்று குறிப்பிட்டார். (6)

# விசாரணைக்கு வருமாறு நிபுணர்களுக்கு அழைப்பு

## ஜனாதிபதி ஆணைக்குழு விடுத்தது

(கொழும்பு)

காணாமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணைகளை நேரில் பார்வையிடுமாறு வெளிநாட்டு நிபுணர் குழுவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யுத்த கால காணாமற் போதல்கள். கடத்தல்கள் மற்றும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசாரணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

மக்ஸ்வெல் பரணகம தலைமையில் இந்த விசாரணைக்குழு யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் அமர்வுகளை நடத்தி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, காணாமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணைக் குழுவிற்கு ஆலோசனை வழங்க மூவர் அடங்கிய வெளிநாட்டு நிபுணர் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

பிரித்தானிய சட்ட வல்லுநரான சேர் டெஸ்மன்ட் டி சில்வா, சேர் ஜிப்ரி நைஸ் மற்றும் பேராசிரியர் டேவிட் க்ரேன் ஆகியோர் இந்த விசாரணைக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

காணாமற் போதல்கள் தொடர்பில் நடத்தப்பட்டு வரும் விசாரணை அமர்வுகளில் பங்கேற்குமாறு நிபுணர் குழுவிற்கு அழைப்பு விடுக்கத் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

அடுத்த அமர்வுகள் மன்னாரில் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரையில் நடை பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமர்வுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட மாட்டாது எனவும், எதிர் வரும் அமர்வுகளில் பங்கேற்குமாறு அழைக்கப்பட இருப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, வெளிநாட்டு நிபுணர் குழுவின் தலையீட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் தெரிவித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (6)

# விபத்தில் இருவர் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பு பிரதான வீதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற விபத்தில் இருவர் மரணமடைந்துள்ளனர்.

அத்துடன் இந்த விபத்தில் படுகாயமடைந்த ஏறாவூரைச் சேர்ந்த எம்.பஷீர் என்பவர் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு. பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

வீதியின் அருகில் மீன் விற்பனை செய்துகொண்டிருந்த ஒருவர் மீதும் அருகில் நின்று கொண்டிருந்த ஒருவர் மீதுமே வேகக் கட்டுப்பாட்டை இழந்த லொறி ஒன்று மோதியதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆறுமுகத்தான் குடியிருப்பு காளி கோவில் வீதியை சேர்நத நாகமுத்து பாலகிருஷ்ணன் (வயது-54).ராசலிங்கம் ராஜேந்திரன் (வயது-27) ஆகியோரே விபத்தில் மரணமடைந்துள்ளனர்.

மேற்படி வாகன சாரதியை கைது செய்துள்ளதுடன், வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் கூறினர். (6)

# பிரிவுத்துயர் பகிர்வு



### இரங்கையா கெங்காதரன்

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் நோர்வே Floro ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இரங்கையா கெங்காதரன் கடந்த 2 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு Floro இல் நடைபெறும்.

### திருமதி விநாயகமூர்த்தி பொன்னம்மா



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரம்,கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி பொன்னம்மா கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை நடைபெறும்.



### திருமதி திருநாவுக்கரசு சிந்தாமணி

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் கனடா Scarborough ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சிந்தாமணி கடந்த மாதம் 31 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு Chapel Ridge Funeral Home,8911 Woodbine Ave,Markham,ON L3R 5G1,Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### சண்முகநாதன் மோகன்



பண்டத்தரிப்பு வடலியடைப்பபைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Dormagen ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகநாதன் மோகன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பண்டத்தரிப்பில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சம்பில்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சபாரட்ணம் சந்திரபோஸ்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா Sydney ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் சந்திரபோஸ் (Engineer- காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை) கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு Pinegrove Memorial Park Lawn Cemetery,Minchinbury NSW 2770,Australia என்னும் முகவரியில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் நில அதிர்வு

## 381 பேர் பலி; 12,000 வீடுகள் சேதம்!

(குன்பிங்)

தென் மேற்கு சீனாவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட கடும் நில அதிர்வினால் 381 இற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதாக சர்வதேச செய்தி தெரிவிக்கிறது.

கட்டட இடிபாடுகளில் சிக்கி ஆயிரக்கணக்கானோர் காயமடைந்த நிலையில், உயிரிழப்பு அதிகரிக்கக் கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.

தென் மேற்கு சீனாவிலுள்ள யுன்னான் மாகாணத்தின் தலைநகர் குன்பிங் பகுதியில், நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில், நிலத்துக் கடியில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நில நடுக்கம், ரிக்டர் அளவில் 6.1 ஆக பதிவாகி இருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்திருந்த போதிலும், 6.5 ரிக்டர் அளவில் தாக்கம் இருந்ததாக சீனா தெரிவித்துள்ளது.

இந்த நிலஅதிர்வினால் சுமார் 12 ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், பல கட்டடங்களஞ்ரீ இடிந்து விழுந்ததில் 381-பேர் பலியானதாகவும், பலர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்ததாக சீன அரசின் ஊடக நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து விழுந்த நிலையில், மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (6)



# ஆயிரத்து 800 பேர் பலி!

## போர் நிறுத்த காலப்பகுதியில் மட்டும் 200 பேர்



காஸாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஹமாஸ் போராளிகள் மீது இஸ்ரேல் படைகள் நடத்தி வரும் கடல் வழி, வான்வழி மற்றும் தரைவழி தாக்குதல்களை தற்காலிகமாக நிறுத்தும்படி, ஐ.நா. பொதுச்செயலாளர் பான கீ மூன் கேட்டுக் கொண்டதையடுத்து மனிதாபிமான முறையில் 72 மணி நேரத்துக்கு இடைக்கால போர் நிறுத்தம் செய்ய சம்மதிப்பதாக இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டனர்.

ஆனால், போர் நிறுத்த காலம் தொடங்கிய சில மணி நேரங்களுக்குள் இரு தரப்பினரும் மாறி, மாறி தாக்குதல் நடத்திக் கொண்டனர். இந்த இடைக்கால போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறிய வகையில் கடந்த 72 மணி நேரமாக நடைபெற்ற இரு தரப்பு தாக்குதல்களில் மட்டும் சுமார் 200 பேர் பலியாகியுள்ளனர்.

இதற்கிடையில், காஸா பகுதியில் இருந்து தனது படைகளை திரும்பப் பெறுவதாக நேற்று இஸ்ரேல் அறிவித்தது. இந்த அறிவிப்பு மனித நேயர்கள் மத்தியில் சற்று மகிழ்ச்சியை ஏற்படுத்திய நிலையில், காஸாவின் ரஃபா என்ற நகரில் உயிர் பயத்தில் சுமார் 3 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் தஞ்சம் அடைந்திருந்த ஒரு பாடசாலையின் மீது இஸ்ரேல் படைகள் நேற்று நடத்திய மனிதாபிமானமற்ற தாக்குதலில் 10 பேர் பலியாகினர். 30 இக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

பாலஸ்தீனிய அகதிகளுக்கு புகலிடம் அளித்து வரும் ஐ.நா. சபையின் கட்டுப்பாட்டில் உள்ள பாடசாலைகளின் மீது கடந்த 10 நாட்களில் இஸ்ரேல் மூன்றாவது முறையாக குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முதியவர்கள், குழந்தைகள் உட்பட 10 உயிர்களை பறித்த நேற்றைய தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மூர்க்கத்தனமாகவும், பைத்தியக்காரத்தனமாகவும் நடத்தப்படும் இது போன்ற தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் 8 ஆம் திகதி தொடங்கி 27 நாட்களாக நடைபெற்று வரும் இரு தரப்பு மோதலில் ஆயிரத்து 800 இக்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் பலியாகியுள்ளனர். 7 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் பலியாகியுள்ளனர். இஸ்ரேல் தரப்பிலும் இராணுவ வீரர்கள் உட்பட 66 பேர் பலியாகியுள்ளனர். (6)

# 180 கோடி ரூபா செலவில் அமெ. இல் இந்து ஆலயம்

(நியூஜெர்சி)

அமெரிக்காவின் நியூஜெர்சியில் ராபின்ஸ் வில்லே என்ற இடத்தில் சுவாமி நாராயண் மந்திர் என்ற மிகப்பெரிய இந்து கோவில் கட்டப்பட்டுள்ளது.

இந்த கோவிலை போசசன்வாசி அக்ஷார் புருசோத்தம் சுவாமி நாராயணன் சான்ஸ்தா என்பவர் கட்டியுள்ளார்.

இக்கோவில் 134 அடி நீளமும், 87 அடி அகலத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு 108 தூண்களும், 3 கர்ப்ப கிரகங்களும் உள்ளன. கோவில் முழுவதும் இத்தாலி மார்பிள்களால் கட்டப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய இந்து கோவிலான இதன் கட்டுமான பணி முடிந்துவிட்டது. திறப்பு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி பிரமாண்டமாக நடைபெறுகிறது.

அடுத்ததாக இக்கோவிலுக்குள் சுவாமி நாராயண் அக்ஷார்தம் என்ற காம்ப்ளக்ஸ் கட்டப்படுகிறது. (6)




# இஸ்ரேல் தரைப்படை வாபஸ்; போர் பதற்றம் குறைகிறது

பாலஸ்தீனத்தின் காஸா பகுதியை ஆட்சி நடத்தும் ஹமாஸ் போராளிகள் அண்டை நாடான இஸ்ரேல் மீது ஒரு வாரமாக ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்தினர். அதைத்தொடர்ந்து கடந்த மாதம் (ஜூலை) 8 ஆம் திகதி காஸா மீது இஸ்ரேல் போர் விமானங்கள் கடற்கரை பகுதியில் குண்டு வீசி தாக்கியது.

மேலும், 17 ஆம் திகதி காஸாவுக்கு இஸ்ரேலின் தரைப்படை நுழைந்து பீரங்கி தாக்குதல் நடத்தியது. கடற்படையும் தாக்கியது. அவர்கள் இஸ்ரேல் எல்லையையொட்டி ஹமாஸ் தீவிரவாதிகள் அமைத்து இருந்த சுரங்க பாதைகளை அழித்தனர்.

பதிலுக்கு இஸ்ரேல் மீது தீவிரவாதிகள் ரொக்கெட் குண்டுகளை வீசினர். இது வரை 3 ஆயிரம் ரொக்கெட்டுகள் வீசப்பட்டுள்ளன. இதனால் சண்டை கடுமையானது.

இந்த தாக்குதலில் ஆயிரத்து 800 பாலஸ்தீனியர்கள் பலியாகி உள்ளனர். இஸ்ரேலை சேர்ந்த 60 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதற்கிடையே நேற்று காஸாவின் தெற்கேயுள்ள ரபாவில் பொதுமக்கள் தஞ்சம் புகுந்துள்ள ஐ.நா. பாடசாலையின் மீது இஸ்ரேல் இராணுவம் குண்டு வீசியது.

அதில் 10 பேர் உயிரிழந்தனர். இது ஐ.நா. மற்றும் அமெரிக்காவை கடும் ஆத்திரம் அடைய செய்தது. சண்டையில் உயிரிழந்தவர்களில் முக்கால் வாசி பேர் பொதுமக்கள் என ஐ.நா. சபை கூறியுள்ளது.

இதற்கிடையே பாடசாலை மீது இஸ்ரேல் குண்டு வீசியதற்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (6)

# படகு கவிழ்ந்ததில் 44 பேர் பலியாகினர்

## பங்களாதேசில் சம்பவம்

(டாக்கா)

பங்காளதேசத்தில் வாழும் பெரும்பாலான மக்கள் நீர் வழி போக்குவரத்தையே நம்பியுள்ளனர்.

ஆபத்து நிறைந்த அந்நாட்டின் ஆற்றுப் பகுதிகளை அன்றாடம் படகுகள் மூலம் கடந்து சென்று தங்களின் பிழைப்பை அவர்கள் நடத்தி வருகின்றனர். ஆறுகளில் திடீரென்று பாய்ந்து வரும் வெள்ளப் பெருக்கும், பெரும் சுழல்களும் இது வரை ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களை பறித்துள்ளது.

படகுகளின் கொள்ளளவையும் மீறி ஏராளமான மக்களை படகோட்டிகள் ஏற்றிச் செல்வதே விபத்துகளுக்கான மூலகாரணம் என்று கருதப்படுகிறது.



இந்நிலையில், பங்காளதேச தலைநகர் டாக்காவின் தென்மேற்கு பகுதியில் உள்ள முன்ஷிகஞ்ச் மாவட்டம் வழியாக பாய்ந்தோடும் பத்மா ஆற்றில் சுமார் 200 பயணிகளுடன் சென்ற படகு கவிழ்ந்தது. [illegible] தகவல் அறிந்து விரைந்து வந்த மீட்புப் படையினர் இதுவரை 44 பயணிகளை மீட்டுள்ளதாகவும் டாக்காவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறித்தனம் என்ற நோயே
நோய்கள் அதனைத்திலும் ஆபத்தானது
- விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சிறுபான்மை இனத்தைத் தாக்க தயாராகும் பேரினவாத சக்திகள்

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடனான போரில் அரசு வெற்றியீட்டிய பின்பான சூழமைவு எத்தன்மையது என்ற ஆய்வுகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன. அத்தகையதொரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டால், இலங்கையின் சமகாலப் போக்கு இனவாதப் போருக்கு வித்திடுவது போன்ற அறிகுறிகளைக் கண்டு கொள்ளலாம்.

அளுத்கமவில் முஸ்லிம்களுக்கு எதிராக நடந்த வன்முறை என்பது சிறுபான்மை இனத்திற்கு எதிரான கட்டவிழ்ப்பு என்றே கூறவேண்டும். முஸ்லிம் இனம் சார்ந்தவர்கள் இந்த நாட்டின் பொறுப்பான அமைச்சுப் பதவிகளில் இருந்த போதிலும் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைக் கட்டவிழ்ப்புகளை கட்டுப்படுத்துவது தொடர்பில், அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை எனில்,

அமைச்சுப் பதவிகளின் அதிகாரம் என்பது கூட அந்தப் பதவியை வகிப்பவரின் இனம் சார்ந்தது என்று சொல்லும் அளவிலேயே எங்கள் நாட்டின் நிலைமை உள்ளது.

தென்பகுதியை மையமாகக் கொண்டு இயங்கும் சில பேரினவாத அமைப்புகள் சிறுபான்மை இனத்துக்கு எதிராக மிக மோசமாக நடந்து கொள்கின்றன.

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்ற அடிப்படையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கும் இவ்வேளையில் சிறுபான்மை இனங்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்து ஓர் இன வன்முறைக்கு வித்திட சில தீய சக்திகள் முனைந்துள்ளன" என்பது தெரிகின்றது.

எனவே, இத்தகைய தீய சக்திகளை வேரோடு களைகின்ற பொறுப்பு இந்த நாட்டின் அரசின் தலையாய கடமையாகும்.

2009 ஆம் ஆண்டு யுத்தத்திற்கு பின்பு இலங்கையில் நீடித்த அமைதி நிலைக்க வேண்டுமாயின் முதலில் இன, மத, மொழி என்பவற்றுக்கான முன்னுரிமைகள் முற்றாக நீக்கப்பட வேண்டும்.

இது எல்லோருக்கும் உரித்தான நாடு என்ற பொதுமை அரசினால் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படுவது அவசியம். ஆனால் அவ்வாறானதொரு சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை.

நேற்று முன்தினம் சப்பிரகமுக பல்கலைக்கழக தமிழ் மாணவன் ஒருவர் இனந்தெரியாதவர்களால் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். கூடவே, தமிழ் இனத்திற்கு எதிரான சுவரொட்டிகளும் பல்கலைக்கழக சூழலில் காணப்படுவதானது அளுத்கமவுக்கு அடுத்தபடியாக வன்முறைச் சம்பவத்தை ஏற்படுத்துகின்ற நோக்கமாக இருக்கலாம்.

எதுவாயினும் இத்தகைய வன்முறைகள் நாட்டில் இடம்பெறாது இருப்பதை அரசாங்கம் உறுதி செய்யும் அதேநேரம், சிறுபான்மை அரசியல் கட்சிகளும் வன்முறைச் சம்பவங்களை முளையிலேயே கிள்ளி எறிவதற்கு தயாராக வேண்டும்.

அதேசமயம் இத்தகைய அறிகுறிகள், தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் கவனயீர்ப்புகள் அவசியமானவை என்பது மறுக்க முடியாத உண்மை.

# மகிந்தவின் கரங்களை பலப்படுத்த பெண்கள் அணி திரண்டுள்ளனர்

## அமைச்சர் பவித்ரா உரை

(கொழும்பு)

நாட்டுக்கு எதிராக தேசிய மற்றும் சர்வதேச சதித்திட்டங்களை தோற்கடித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கரங்களை பலப்படுத்த பெண்கள் ஒரு சக்தியாக அணிதிரண்டு வருவதாக அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

எகலியகொட நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில்உள்ள அனைத்து பெண்களின் கைகளிலும் நாட்டின் உண்மையான தேசிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

30 வருடங்களாக இருந்து வந்த பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லும் சந்தர்ப்பத்தில், நாட்டை மீண்டும் பின்நோக்கி நகர்த்த தேசிய மற்றும் சர்வதேச சதித்திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

இலங்கை பெண்கள் இந்த சதித்திட்டங்களுக்கு எதிராக முன்னோக்கி வருகின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தில் தேசத்தை காப்பாற்றி கொடுத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கரங்களை பலப்படுத்துவது பெண்கள் கடமையாகும்.

2002 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை நாட்டை ஆட்சி செய்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை கடலிலும், நான்கில் மூன்று பகுதியை விடுதலைப் புலிகளுக்கும் எழுதி கொடுத்தார்.

அதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே மாற்றி அமைத்தார் எனவும் பவித்ரா வன்னியாராச்சி குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## தவறு செய்தோரை தண்டிப்பேன்-மகிந்த

(கொழும்பு)

தவறு செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைத் தண்டிக்க தயங்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

மாத்தறை, கம்புறுபிட்டிய பொதுக் கூட்டம் ஒன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், எனது அரசாங்கத்தில் தவறு செய்கின்றவர்களுக்கு இடமில்லை. அவர்கள் யாராக இருந்தாலும் தண்டிப்பதற்கு நான் தயங்க மாட்டேன்.

கடந்த காலங்களிலும் தவறு செய்தவர்களைத் தண்டிப்பதில் இந்த அரசாங்கம் முன்மாதிரியுடன் செயற்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களிலும் அவ்வாறே செயற்படும் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று நாட்டுக்கு எதிராக துரோகமிழைப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மன்னிக்கப்படக் கூடாது. நாட்டைத் துண்டாடும் அவர்களின் நோககத்திற்கு இடமளிக்கக் கூடாது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (செ-11)

## வயோதிபப் பெண் விபத்தில் சிக்கி பலி

நீர்கொழும்பு வைத்தியசாலையின் முன்பாக பாதை மாற முயன்ற வயோதிபப் பெண்ணொருவர் வாகனத்தில் மோதி ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. 70 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரே சம்பவத்தில் பலியானவராவார்.

குறித்த பெண், நேற்று முன்தினம் காலை மினுவாங்கொடையிலிருந்து நீர்கொழும்பு நோக்கி வரும் 245 ஆம் இலக்க பஸ்ஸில் பயணித்து நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையின் முன்பாக வந்து இறங்கியுள்ளார். பின்னர் அவர் வைத்தியசாலைக்கு செல்வதற்காக பாதையை கடக்கும் [illegible]

## நாட்டிற்கு எதிரான சக்திகளை தோற்கடிக்க ஒன்றிணைவோம்

### அழைக்கிறார் ரட்ணசிறி

(கொழும்பு)

நாட்டுக்கு எதிரான சக்திகளை தோற்கடிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், போர் இடம்பெற்ற காலத்தில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகவும், போர்க்குற்றச் செயல்கள் இடம்பெற்றதாகவும் நிரூபிக்க உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் முயற்சிக்கின்றன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே பொய்யானவை. நாட்டுக்கு எதிரான சதித்திட்டங்களை முறியடிக்க அனைத்து தேசப்பற்றுடைய சக்திகளும் அணி திரள வேண்டும்.

சில வெளிநாட்டு ஊடகங்கள் நாட்டின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படும் வகையில் பிரசாரம் செய்து வருகின்றன.

இளைய சமூகத்தினர் நல்ல பண்புகளை பேணுவதில் சவால் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் எழக்கூடிய சர்வதேச சவால்களை ஈடுசெய்ய பெண்கள் சமூகத்தை வலுப்படுத்த வேண்டியது அவசியமானதாகும் என ரட்ணசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போது அவர இதனைக் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக்கந்தப் பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்

**05.08.2014 இற்கான வினா**

வானப்பிரஸ்த நிலையின் சிறப்புக்கள் யாவை?

**04.08.2014 ற்குரிய கேள்வியும் விடையும்**

**கிருகஸ்த நிலையின் சிறப்புக்கள் எவை?**

1.பிரம்மச்சரியத்தில் கற்றுக்கொண்ட அறத்தின் படி பொருள் ஈட்டி, அறவழியில் இன்பத்தை அனுபவித்தல்

2.யாகங்களைச் (யக்ஞம்) செய்வித்தல்

- பிரம்ம யக்ஞம்: வேதங்களையும் தத்துவங்களையும் அவற்றைப் பேணுகின்ற ரிஷிகளையும் பாதுகாத்தல்
- தேவயக்ஞம்: முப்பத்து மூன்று கோடி தேவர்களையும் வணங்குதல் (இயற்கையைப் பேணுதல்)
- பித்ரு யக்ஞம்: பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் எமக்குத் தந்த நம்முன்னோர்களைப் போற்றுதல்
- மனுஷ யக்ஞம்: மனிதர்களை மதித்து அவர்களுடன் அன்பாக இருந்து உதவி செய்தல்
- பூதயக்ஞம்: மரங்கள், பறவைகள், விலங்குகள் போன்ற ஏனைய ஜீவராசிகள் மீது அன்பு செலுத்துதல், ஆதரவளித்தல்

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடை என்பவற்றை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் 26.08.2014 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை சின்மய ஞானவேல், சின்மயா மிஷன், இல.09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் கையளித்துப் போட்டியில் பங்குபற்றவும்.

சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்

இல.09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர். 021 2223447

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

### விதியை நீயே வகுக்கலாம்



- நாம் நம்மைப் பற்றி எண்ணாத நேரத்தில் மட்டுமே உண்மையான வாழ்க்கையை அனுபவிக்கிறோம்.
- ஆற்றல் மிக்க மனிதர்கள் தங்களுக்குஉரிய விதியை தாங்களே வகுத்துக் கொள்கிறார்கள்.
- சுதந்திரமான நிலையில் மட்டுமே அன்பு முழு அளவில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்.
- எந்தப் பணியில் ஈடுபட்டாலும், அதை உயர்ந்த வழிபாடாக எண்ணிச் செய்யுங்கள்.
- அன்பும், வெறுப்பும் புறப்பட்ட இடத்திற்கே மீண்டும் வந்து சேரும் ஆற்றல் படைத்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளியவளை வளர்மதி வி.கழகம் நடத்திய மென்பந்தாட்ட போட்டி

## முள்ளியவளை வித்தியா சம்பியன்





**முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்தாட்ட போட்டியில் ஹிஜ்ராபுரம் அல் ஹிஜ்ரா விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி முள்ளியவளை வித்தியா விளையாட்டுக் கழகம் சம்பியன் ஆகியது.**

முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்திய 15 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியானது கடந்த சனிக்கிழமை வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் முள்ளியவளை வித்தியா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஹிஜ்ராபுரம் அல் ஹிஜ்ரா விளையாட்டுக் கழகத்தினர் மோதினர்.

ஆட்டமானது பரபரப்பாக நடைபெற்றது. வெற்றிவாய்ப்பு அல்ஹிஜ்ரா அணிபக்கம் இருந்தபோதும் வித்தியா அணித்தலைவர் அ.அஞ்சயன் தனது முதலாவது பந்துப் பரிமாற்றத்தின்போது 2 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளை கைப்பற்றி ஆட்டத்தின் போக்கினை மாற்றினார்.

அத்துடன் வித்தியா அணியின் வினோசன், நிப்ராஸ் ஆகியோர் தமக்கு கிடைத்த இரண்டு பந்துப் பரிமாற்றங்களை ஓட்டமற்ற பந்துப்



பரிமாற்றங்களாக பந்தினை வீசியதன் மூலம் தமது வெற்றியினை உறுதிப்படுத்தினர்.

இறுதியில் 42 ஓட்டங்களால் வித்தியா அணி வெற்றியீட்டியது.

ஆட்ட நாயகனுக்கான விருதினை அஞ்சயனும் ஆட்டத்தொடர் விருதினை நிப்ராஸ்ம் பெற்றுக் கொண்டனர்.

# 28 ஆண்டுகளின் பின் இங்கிலாந்து முதலிடம்



'கிளாஸ்கோ கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை முடிவுக்கு வந்துள்ளன.

மொத்தமாக 17 விளையாட்டுப் பிரிவுகளில் 261 தங்கப் பதக்கங்களுக்கான போட்டிகள் கடந்த 11 நாட்களாக நடந்தன.

இம்முறை விளையாட்டு விழாவில் இங்கிலாந்து அணி 58 தங்கம், 59 வெள்ளி அடங்கலாக 174 பதக்கங்களை வென்று முதலிடத்தைப் பிடித்துள்ளது.

கொமன்வெல்த் போட்டிகளில் இங்கிலாந்து 28 ஆண்டுகளுக்குப் பின்னர் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இரண்டாம் இடத்தைப் பிடித்த அவுஸ்திரேலியா 49 தங்கம், 42 வெள்ளி அடங்கலாக 137 பதக்கங்களை வென்றது. கனடா 32 தங்கம அடங்கலாக 82 பதக்கங்களுடன் மூன்றாம் இடத்திற்கு வந்தது.

போட்டியை நடத்திய ஸ்காட்லாந்து 19 தங்கம் அடங்கலாக 53 பதக்கங்களை வென்று நாலாவது இடத்தைப் பிடித்தது.

கடந்த தடவை டில்லி கொமன்வெல்த் போட்டிகளில் 38 தங்கம் அடங்கலாக 101 பதக்க்ங்களை வென்று இரண்டாம் இடத்தைப் பிடித்திருந்த இந்தியா இம்முறை கிளாஸ்கோவில் ஐந்தாம் இடத்தையே பிடிக்க முடிந்தது. (க)

# இந்தியாவின் மோசமான களத்தடுப்பே தோல்விக்கு காரணமாக அமைந்தது

## இந்திய வீரர்கள் மீது கபில்தேவ் பாய்ச்சல்

இங்கிலாந்து அணிக்கெதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியா தோற்றதையடுத்து கபில்தேவ் தனது கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

லண்டன் லார்ட்சில் நடந்த 2 ஆவது டெஸ்டில் இங்கிலாந்தை தோற்கடித்த இந்திய அணி, சவுதம்டனில் நடந்த 3 ஆவது டெஸ்டில் தோல்வியை சந்தித்தது.

இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட இந்த டெஸ்ட் தொடர் 1:1 என்ற கணக்கில் சமநிலையை அடைந்துள்ளது.

இந்த தோல்விக்கு சில விடயங்கள் காரணமாக இருந்தன என்று முன்னாள் அணித்தலைவர் கபில்தேவ் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,

லார்ட்ஸ் டெஸ்டில் களத்தடுப்பில் இந்தியா சிறப்பாக செயல்பட்டது. ஆனால் சவுதம்டனில் சில கேட்ச்சுகளை நழுவ விட்டனர். இதைத் தொடர அனுமதிக்க கூடாது.




இந்திய அறிமுக பவுலர் பங்கஜ்சிங் முதல் முறையாக சர்வதேச களத்தில் பந்து வீசினார். இது துடுப்பாட்டத்திற்கு சாதகமான ஆடுகளமாக இருந்தாலும், அவர் விக்கெட் எடுக்கும் அளவுக்கு நன்றாகவே பந்து வீசினார்.


ஆனால் அவரது பந்து வீச்சில் களத்தடுப்பில் இருந்தவர்கள் கேட்ச்சை தவற விட்டு விட்டனர். இதனால் இந்த போட்டியில் அவருக்கு விக்கெட்டே கிடைக்காமல் போய் விட்டது.


தொடர்ந்து கேட்ச்சுகளை தவற விட்டால், எதிரணியின் 20 விக்கெட்டுகளையும் வீழ்த்த முடியாது என்று கூறியுள்ளார். (க)

# யாழ்.மாவட்ட அணி வீரர்கள் கௌரவிப்பு











தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட 26 ஆவது விளையாட்டு விழாவில் 3 ஆம் இடத்தை பெற்றுக்கொண்ட ஆண்கள் மென்பந்தாட்டத் துடுப்பாட்ட அணி வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வல்வை சேவா நிலையத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வினை வடமாகாண சபை உறுப்பினர்களான, எம்.கே. சிவாஜிலிங்கம், பாலச்சந்திரன் கஜதீபன், சந்திரலிங்கம் சுகிர்தன், விந்தன் கனகரத்தினம். இமானுவல் ஆனோல்ட், வல்வெட்டித் துறை நகர சபை உறுப்பினர் கந்தசாமி சதீஸ் ஆகியோர் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.

கம்பஹாவில் இடம்பெற்ற மேற்படி மென்பந்தாட்டத் துடுப்பாட்டப் போட்டியின், காலிறுதிப் போட்டியில் கம்பஹா அணியுடன் யாழ். மாவட்ட அணி விளையாடிக் கொண்டிருந்த போது, யாழ். மாவட்ட வீரர்களை, அம்பாந்தோட்டை அணி வீரர்கள் தாக்கியதுடன், தகாத வார்த்தைகளாலும் பேசியுள்ளனர்.

இதனால், மனதளவில் தளர்வடைந்திருந்த யாழ். மாவட்ட வீரர்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் இந்த கௌரவிப்பு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதன்போது, யாழ். அணி வீரர்களுக்குப் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன. (க)

# இலங்கையின் இரட்டை கோபுரங்களை தகர்ப்பதே வெற்றிக்கான வழியாகும்



இலங்கை அணியுடன் மோதவுள்ள பாகிஸ்தானுக்கு வெற்றி கிடைக்க சங்கக்கார, ஜெயவர்தனே வீழ்த்துவதே சிறந்த வழி என்று பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் கூறியுள்ளார்.

இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் 2 டெஸட், 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி வருகின்ற 6 ஆம் திகதி தொடங்குகிறது.

இது குறித்து பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் கூறுகையில்,

இலங்கை அணியுடன் நடக்க உள்ள 2 போட்டிகள் கொண்ட டெஸட் தொடரில், அனுபவ வீரர்கள் ஜெயவர்தனே, சங்கக்கரா விக்கெட்டுக்களை வீழ்த்துவ்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இதனை எங்கள் அணி பந்து வீச்சாளர்களிடம் வலியுறுத்தி உள்ளோம் என்று கூறியுள்ளார். (க)




ஏழாலை கிழக்கு 5 ஸ்டார் விளையாட்டு கழகம் நடத்திய அணிக்கு 5 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் சூராவத்தை நியூ வாரியஸ் அணி சம்பியன் பட்டம் வென்றது. அவ் அணியினரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (உ/த) பரீட்சை ஆரம்பம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது. நாடு முழுவதுமுள்ள 2 ஆயிரத்து 120 பரீட்சை நிலையங்களில் உயர்தரப் பரீட்சைகள் நடைபெறவுள்ள அதேநேரம் 295 நிலையங்கள் இணைப்பு மத்திய நிலையங்களாகவும் செயற்படவுள்ளன.

ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ள இந்த பரீட்சைக்கு 2 இலட்சத்து 96 ஆயிரத்து 313 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இவர்களுள் 2 இலட்சத்து 34 ஆயிரத்து 192 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளெனவும் ஏனைய 62 ஆயிரத்து 116 பேரும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளெனவும் பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யு.எம். என். ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

இதேவேளை பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் ஆகஸ்ட் 29 முதல் ஆரம்பிக்கப்படும்.

பரீட்சை நடைபெறும் காலப் பகுதிக்குள் பரீட்சை ஊழல் இடம்பெறாத வகையில் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன் ஊழலில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பரீட்சைகள் ஆணையாளர் கூறினார். (செ-11)

# ஜெயலலிதா...

இலங்கை தூதரக அதிகாரி நிச்சயம் நேரில் வரவழைக்கப்பட்டு அவருடன் இது குறித்து விவாதிக்கப்படும் என்று நாடாளுமன்றத்தில் சுஷ்மா தெரிவித்தார்.

முன்னதாக முதல்வர் ஜெயலலிதா குறித்து இலங்கை இணையத்தளத்தில் வெளியான அவதூறு கட்டுரை தொடர்பாக அ.தி.மு.க உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்ற நடவடிக்கைகள் முடங்கின.

மாநிலங்களவை நேற்று காலை கூடிய சிறிது நேரத்தில், இது பற்றி பிரச்சினை எழுப்பிய அவர்கள், அவையின் மையப்பகுதிக்குச் சென்று கூச்சலிட்டனர். இலங்கை பாதுகாப்பு அமைச்சகத்தின் இணையத்தளத்தில் ஜெயலலிதா பற்றி அவதூறான செய்தி வெளியிட்டதை கண்டித்தும், இலங்கை ஜனாதிபதிக்கு எதிராகவும் அவர்கள் முழக்கமிட்டனர்.

இதனால் கடும் கூச்சல் குழப்பம் நிலவியதால், அவை 15 நிமிடங்களுக்கு முதலில் ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அவை கூடிய போதும், இதே பிரச்சினையை மீண்டும் கிளப்பி அ.தி.மு.க உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். (செ-11)

# வடக்கு மக்களின் நலன்...

இவ்வாறே யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் முதற்கூட்டத்தில் இக்கைநூலை உள்ளடக்கியுள்ளேன்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இணைத் தலைவராக தலைமை தாங்க வேண்டும் என்று ஜனாதிபதியினால் நான் கேட்கப்பட்டிருந்தேன். அதன் பிரதி ஒன்றை இங்கு சமர்ப்பிக்கின்றேன். அக் கடிதத்தின்படி வருங்காலம் சம்பந்தமான மகிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்தவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவானது உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறி என்னை அதனை நடைமுறைப்படுத்த உதவும் வகையில் இணைத்தலைவராக வேண்டும் என்று கேட்கப்பட்டிருந்தேன். மகிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு எதுவும் எமக்கில்லை.

அப்படியிருந்தும் கூட அரசாங்கத்துடன் இணைந்து ஒத்துழைக்கலாம் என்ற எண்ணத்தில் இவ்வருடம் ஜனவரி மாதம் 2-ந் திகதி ஜனாதிபதியை சென்று சந்தித்தேன். பல உறுதிப்பாடுகளை அவர் அத்தருணத்தில் தந்திருப்பினும் எதனையும் அவர் இன்று வரை நடைமுறைப்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக மக்களின் ஜனநாயக உரிமைகளை மதியாமல் தொடர்ந்து மத்திய அரசாங்கக் கட்டமைப்புக்களே வட மாகாண நிர்வாகப் பரிபாலனத்தைக் கொண்டு நடத்தி வருகின்றன. இங்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். அரசியல் யாப்பில் மாகாண சபைகளுக்கென சில விடயங்களும், மத்திய அரசாங்கத்திற்கென சில விடயங்களும், இருவற்றிற்கும் பொதுவான சில் விடயங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன் காரணத்தினால்தான் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் கூட்டப்படுவதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் ஒருங்கிணைப்புக் கூட்டங்களின் ஊடாக சட்டத்தால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் தனியான அதிகாரங்களை மத்திய அரசாங்கம் தன் வசப்படுத்த இடமளிக்க முடியாது. அந்த அதிகாரங்கள் ஊடாக அவ்வந்த விடயங்கள் சம்பந்தமாக கொள்கைகள் வகுப்பதும் அவற்றை நெறிப்படுத்தி நடைமுறைப்படுத்துவதும் மாகாண சபைகளையே சாரும் என்பதை இத் தருணத்தில் கூறி வைக்கின்றேன். எதேச்சையாக அரசாங்கமும் அரசாங்க அமைச்சர்களும் நடக்கத் தலைப்பட்டால் மக்களால் புறந்தள்ளப்பட்டவர்கள் மக்களின் அமோக ஆதரவைப் பெற்றவர்களின் தோளில் ஏறிச் சவாரி செய்பவர்களாய் ஆகி விடுவர். இது ஜனநாயகத்தைப் பாதிக்கும் என்பதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. தொடர்ந்தும் எம்மக்கள் எதேச்சாதிகாரத்தின் கோரப்பிடிக்குள் சிக்கித் தவிக்க வேணடும் என்று எண்ணுவது மனிதாபிமானமற்றது மட்டுமல்லாமல் மடமையுமாகும்.

வட கிழக்கு மக்களின் விடிவிற்காகத்தான் 13-வது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதனை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப் போய் எமக்குத் தந்துதவப் போன சமச்சீர்மையற்ற அதிகாரப் பகிர்வானது கவனத்திற்கு எடுக்கப்படாமல் போயுள்ளது.

தற்பொழுது மத்திய அரசாங்கத்தின் கீழ் சகல அதிகாரங்களையும் உள்ளிழுக்கவே நடவடிக்கைகள் மத்திய அரசாங்கத்தால் முடுக்கிவிடப்பட்டுள்ளது. இதற்கு திவிநெகும சட்டம் ஒரு உதாரணம். மாகாண சபைகளின் சுதந்திரத்திலும் அதிகாரங்களிலும் கை வைப்பதாகவே மேற்படிச்சட்டம் அமைந்துள்ளது என முதலமைச்சர் சுட்டிக் காட்டினார். (செ-4)

# வட மாகாண...

கப்படவுள்ளன.

நிதி நியதிச் சட்டம் தொடர்பில் 2-வது வாசிப்பு குழுநிலை விவாதம் நடைபெற்றுள்ள நிலையில் இன்றைய தினம் சபையின் அங்கீகாரத்திற்கு விடப்படவுள்ளது.

இதன்பின்னர் முத்திரை கைமாற்றல் நியதிச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டு 2-வது வாசிப்பு குழுநிலை விவாதத்தையடுத்து சபையின் அங்கீகாரத்திற்கு விடப்படவுள்ளது. (செ-4)

# இலங்கை...

வீரர்களும் சென்னையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக சென்னையை விட்டு வெளியேறுமாறு இலங்கை துடுப்பாட்ட அணியை தமிழகப் பொலிஸார் அறிவுறுத்தினர்.

சென்னையை சென்றடைந்த இலங்கை துடுப்பாட்ட அணியை போட்டித் தொடரில் நேற்றுக் காலை பங்கேற்க தமிழக அதிகாரிகள் அனுமதிக்கவில்லை.

இலங்கை துடுப்பாட்ட அணியினரை சென்னையை விட்டு வெளியேறுமாறும், அவர்களுக்குத் தம்மால் பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்க முடியாது என்றும் தமிழக அதிகாரிகள் நேற்றுக் காலை தெரிவித்தனர்.

இதனையடுத்து இலங்கை துடுப்பாட்ட அணியினர் நேற்றுக் காலை அவசரமாக கொழும்புக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தப் போட்டித் தொடர் 4-ம் திகதி தொடக்கம் ஏழு தினங்களுக்கு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. (செ-11)

# காணாமல்...

இந்த கூட்டத்தின்போது, சட்ட விரோதமான செயல்கள் எதுவும் கூடியிருந்தவர்களால் செய்யப்படவில்லை என்று கூறிய அவர் பிக்குகளின் நடவடிக்கைகளை தடுப்பதற்கு பொலிஸார் போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

இது சம்பந்தமாக விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு பொலிஸாரிடம் புகாரொன்றை சமர்ப்பித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (செ-11)

# செயலர்களை...


மாகாண முதலமைச்சர் மற்றும் தலைமைச் செயலர் ஆகியோர் ஒத்துழைப்பாக ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது, மாகாண முதலமைச்சர் பிறப்பிக்கும் சட்டபூர்வமான உத்தரவுகளுக்கு, தலைமைச் செயலர் மதிப்பளித்து, நிர்வாகத்தை சீர்குலைக்காத வகையில் செயல்படுவாரானால், சுமுகமான ஒரு தீர்வுக்கு தாங்கள் தயார் என, வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்திருந்தார்.

முதலமைச்சரின் இந்த அறிவித்தலை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளதாக கூறிய அவர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் எம்.ஏ.சுமந்திரன் மாகாண நிர்வாகத்தை குழப்பாத வகையில் செயற்படுமாறு தலைமை செயலாளருக்கு நீதிபதிகள் உத்தரவிட்டதாக தெரிவித்தார்.

இதையடுத்து இந்த வழக்கு முடிவுக்கு வருகிறது எனவும் நீதிமன்றம் அறிவித்தது. (செ-11)

# புவனேஷ்வர் குமார் காயம் புதிய நெருக்கடியில் இந்தியா



இஷாந்த் ஷர்மாவை தொடர்ந்து வேகப் பந்துவீச்சாளர் புவனேஷ்வர் குமாரும் காயம் அடைந்துள்ளதால் இந்தியாவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்த நிலையில், அடுத்து 2-வது டெஸ்டில் இந்தியா வெற்றி பெற்று சாதனை படைத்தன.

அந்த டெஸ்டின் 2-வது இன்னிங்ஸில் அபாரமாகப் பந்துவீசிய இஷாந்த் ஷர்மா 7 விக்கெட் கைப்பற்றி ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

கணுக்காலில் காயம் ஏற்பட்டதை அடுத்து, 3-வது டெஸ்டில் இஷாந்த் விளையாடவில்லை. இதனையடுத்து இந்தியா படுதோல்வி அடைந்தது.

இந்நிலையில், 4-வது டெஸ்ட் போட்டி மான்செஸ்டர் ஓல்ட் டிரபோர்ட் மைதானத்தில் 7-ம் திகதி தொடங்குகிறது.

இந்த போட்டியிலும் இஷாந்த் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மற்றொரு முன்னணி வேகப் பந்துவீச்சாளர் புவனேஷ்வர் குமாரும் காயத்தால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது இந்திய அணிக்கு சிக்கலை கொடுத்துள்ளது.

பயிற்சி செய்தபோது கூட இஷாந்த், புவனேஷ்வர் இருவரும் அதில் பங்கேற்காமல் ஓய்வெடுத்தனர்.

இதுபற்றி அணித்தலைவர் தோனி கூறுகையில், முதல் 2 டெஸ்ட் போட்டியிலும் புவனேஷ்வர் அற்புதமாகப் பந்துவீசினார். அதனால் அவர் சற்று சோர்வாக உள்ளார்.

இந்நிலையில் அவருக்கு காலில் லேசான வீக்கம் ஏற்பட்டுள்ளது. போதுமான ஓய்வுக்கு பிறகு புவனேஷ்வர் மீண்டும் பயிற்சியை தொடங்குவர்.

அதன் பின்னர் நான்காவது டெஸ்ட் போட்டிக்கு முழு அளவில் தயாராகிவிடுவார் என நினைக்கிறேன் என்று கூறியுள்ளார். (க)

# டக் அவுட்டில் தோனியை ஓரங்கட்டி உலக சாதனை படைத்த கெய்ல்




கரிபீயன் பிரீமியர் லீக் போட்டியில் விளையாடி வரும் மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் உலகசாதனை படைத்துள்ளார்.

இருபது-20 போட்டிகளில் கெய்ல் களமிறங்கி விட்டால் மைதானத்தில் சூறாவளியாக சுழன்று அடிப்பார். அது மட்டுமல்லாது அவர் இது வரை கடைசி 90 போட்டிகளில் "டக் அவுட்" ஆனதே இல்லை.

இதன் மூலம் இருபது-20 போட்டிகளில் அதிகமுறை "டக் அவுட்" ஆகாமல் இருந்த வீரர் என்ற சாதனையை படைத்தார் கெய்ல். இது வரை பாகிஸ்தான் அணியின் வீரர் மலிக் 89 முறை "டக் அவுட்" ஆகாமல் இருந்ததே சாதனையாக இருந்தது.

ஆனால் கெய்ல் 90 முறை "டக் அவுட்" ஆகாமல் விளையாடி உலக சாதனை படைத்தார். மற்றவர்கள் 89, 82 என்ற நிலைகளில் ஓட்டங்கள் எடுக்காமல் ஆட்டமிழந்து பட்டியலில் இருந்து வெளியேறிவிட்டனர்.

கெய்லின் சாதனை வரிசையில் இந்திய அணித்தலைவர் தோனி 80 முறை என்ற நிலையில் 4வது இடத்தில் உள்ளார். தோனி சாதிக்கும் முன்னே கெய்ல் கரிபீயன் பிரீமியர் லீக் போட்டியில் விளையாடி சாதனை படைத்து விட்டார்.

கெய்லின் சாதனையை முறியடிக்க தோனி இன்னும் 11 முறை நிலைத்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனின் உறுதியை...

தளபதி ஜெனரல் சுந்தர்ஜியும் சம மான காரணம் என்று அவர் கூறி யுள்ளார்.

இந்திய அமைதி காக்கும் படை யினரை இலங்கைக்கு அனுப்புவதற்கு முன்னர் அமைச்சரவையின் அனுமதி பெறப்படவில்லை என்று இந்தியா வின் முன்னாள் மத்திய அமைச் சர் நட்வர் சிங் எழுதியுள்ள நூலில் கூறப்பட்டுள்ளமை குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பேராசான் இலக்கிய கலாநிதி **நாகலிங்கம் பாலகிருஷ்ணன்**
(முன்னாள் வவுனியா வளாக முதல்வர் கலைப்பீடாதிபதி, பொருளியல் துறைத் தலைவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்களது
1ம் வருட நினைவாக வெளியீடப்படும் சேவை விதப்பு

**நினைவுப் பேருரையும்**
**நூல் மற்றும் சஞ்சிகை வெளியீட்டு விழா**

**காலம்:** 06.08.2014 புதன்கிழமை (மு.ப 10 மணி)
**இடம்:** கைலாசபதி கலையரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நூல்: இலங்கையின் சமகால சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள்
பதிப்பாசிரியர்: சு.சி.உதயகுமார், தலைவர்: பொருளியல்துறை

சஞ்சிகை அபிவிருத்திப் பொருளியல் - இதழ் 05
வெளியீடு: இளம் பொருளியலாளர் மன்றம்

நினைவுப் பேருரை: அதிகார பன்முகப்படுத்தலும் பிராந்தியங்களுக்கிடையிலும் பிராந்தியத்தினுள்ளும் அபிவிருத்தி
வழங்குபவர்: பேராசிரியர் இ.நந்தகுமார்
(முன்னாள் முதல்வர், வவுனியா வளாகம்)

(C-8114)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பொருளியல் துறையினர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இது தொடர்பில் இலங்கையில் 1987ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரை இந்திய படைத்தரப் பின் புலனாய்வு அதிகாரியாகப் பணி யாற்றிய கேணல் ஹரிகரன் கருத்து தெரிவிக்கையில், முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி திடீர் முடிவுகளையே எடுத்தார்.

இது போன்று தான் பஞ்சாபில் ஹர் சன்ந் சிங் லோங்கோவால் உடன் பாடு, போடோலாந்து என்பவற்றிலும் முடி வுகள் எடுக்கப்பட்டிருந்தன. கொள்கை வகுப்பாளர்களின் கருத்துக்களை கேட் கும் அளவுக்கு ராஜிவ் காந்திக்கு நேரம் இருக்கவில்லை.

வெளிநாடு ஒன்றில் கிளர்ச்சியாளர் களுடன் போராடுவதற்காக இலங்கை யுடன் இந்தியா ஒப்பந்தம் செய்து கொள் வதை அப்போதைய வெளிவிவகார அமைச்சர் பி.வி.நரசிம்மராவ் எதிர்த்தார் என்று முன்னாள் வெளிவிவகாரச் செயலா ளர் ஜே.என்.டிக்சிற் தனது நூலில் தெரி வித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடு வதற்காக கொழும்பு சென்றிருந்த போதே, இலங்கைப் பிரச்சினையின் தீவிரத்தை ராஜிவ் காந்தி உணர்ந்து கொண்டார் என சென்னைப் பல்கலைக்கழகத்தின் முன் னாள் பேராசிரியர் வி.சூரியநாராயணன் குறிப்பிட்டுள்ளார். இந்த ஒப்பந்தம் கை யெழுத்திடப்பட்ட மறுதினம் ராஜிவ் காந் திக்கு அணிவகுப்பு மரியாதை வழங்கப் பட்ட போது, அவர் இலங்கையின் கடற் படைச் சிப்பாய் ஒருவரால் தாக் கப்பட்டார்.

தமிழீழ விடு தலைப்புலிகளை 72 மணித்தி யாலத்தில் தோற்கடித்து விட முடியும் என அப் போது இந்தியா வன்படைத்தள பதியாக இருந்த ஜெனரல் சுந் தர்ஜி ஆலோ சனை வழங் கினார்.

ஆனால இல ங்கையில் கள நிலைமைகள் குறித்து ஜென ரல் சுந்தர்ஜிக்கு எதுவும் தெரி யாது.

இதனால் இலங்கையில இருந்து 19 மாதங்களின் பின்னர், இந்திய அமைதி காக்கும் படையினர் அவமானத்துடன் திரும்பினர்.

அதேவேளை, தனது படைத் தரப்பை திசை திருப்பி நாட்டின் பிற பகுதிகளில் கிளர்ச்சிகளை அடக்கு வதற்கு வடக்கில் இந்திய அமைதி காக்கும் படையினர் நிலை கொண்டி ருந்தமை அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த் தனவுக்கு உதவியது என்று சூரிய நாராயணன் தெரிவித்துள்ளார்.

1987ஆம் ஆண்டு ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தில் இந்தியா உணவுப் பொதிகளை வீசிய பின்னர், எந்த வெளிநாட்டு உதவிகளும் கிடைக் காத நிலையில், ஒப்பந்தத்தில் கை யெழுத்திடுமாறு ஜே.ஆரின்கையை இநதியா முறுக்கிய போது அவ ருக்கு வேறு தெரிவுகள் இருக்க விலலை.

இலங்கையில் தமிழர்களின் எதிர் பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகை யில், பங்களாதேஷ் பாணியில் இந் தியா சுதந்திர தமிழீழத்தை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தையும் இது ஏற்படுத்தியது.

ஆனால் தீர்வு விடயம் தொடர் பில் ஐக்கிய இலங்கைக்கான ஆத ரவை இந்தியா உறுதிப்படுத்தியது. இறுதியில், விடுதலைப் புலிகளு டன் இந்தியாவைப் போரிட வைத் தார் ஜே.ஆர்.

அதேவேளை, இந்தியாவின் நிர்ப்பந்தத்துக்கு அடிபணிய மாட் டேன் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சுதுமலை யில் ஆற்றிய உரையை இந்திய அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் தமது ஆயு தங்களை பெயரளவுக்கே ஒப்படைத தனர். இதன் போது பயன்படுத்த முடி யாத மற்றும் பயனற்ற ஆயுதங்களே கையளிக்கப்பட்டன.

இந்தியாவின் அரசாங்கம், புல னாய்வு அமைப்புகள் மற்றும் படைத் தரப்பினர் என்று அனைவருமே தமிழீழத்தை அமைப்பதற்கான போராட்டத்துக்குத் தலைமை தாங் கிய பிரபாகரனின் உறுதிப்பாட்டைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர் என்று கேணல் ஹரிகரன் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)




# வடக்கு மக்களின் நலன்...

வவுனியா மாவட்ட ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிற்பகல் 2.00 மணிக்கு அரச அதி பரின் புதிய கருத்தரங்கு மண்டபத் தில் நடைபெற்றது.

இதில் இணைத் தலைவர் உரை யாற்றும்போதே அவர் மேற்கண்ட வர்று தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணைத் தலைவராக வுவுனி யாவில் நான் பங்குபற்றும் முதற் கூட்டம் இது. முன்னர் எமது கட்சி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங் களில் பங்குபற்றாது இருந்தமை உண்மைதான். என்றாலும் தற் பொழுது பல காரணங்களால் அவற றில் பங்குபற்றி வருகின்றோம்.

சட்டத்திற்குப் புறம்பான பல நட வடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு, அரச வளங்களைப் பாவித்து, ஆளு நரைத் தமது தேர்தல் கூட்டங்களில் தம் சார்பாகப் பேச வைத்து, இராணு வப் பயமுறுத்தல்களை ஏற்படுத்தி அவற்றின் மத்தியில்தான் வட மாகாண சபைத் தேர்தல் சென்ற செப்ரம்பர் மாதம் நடத்தப்பட்டது.

அப்படியிருந்தும் 38 பிரதிநிதி களில் எம்மவர்கள் 30 பேர் மிகப் பெருவாரியான வாக்குகளால் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

எனவே மகிந்த சிந்தனை உள் ளடங்கிய அரசாங்கக் கொள்கை களை எமது மக்கள் நிராகரித்து எமது கூட்டமைப்பின் கொள்கைகளை ஏற் றுக் கொண்டார்கள் என்பதில் சந் தேகம் எதுவும் எழத்தேவையில்லை.

ஆனால் தேர்தலின் பின்னர் ஒரு சில வாரங்களினுள் மாகாணமக்கள் நலம் கருதாது ஆளும் கட்சி நலன் கருதியே நடவடிக்கைகள் எடுத்துச் செல்லப்படுவது எம்மால் புரிந்து கொள்ளப்பட்டது.

மத்திய அரசாங்க ஆளும் கட்சி தாம்தருவதை மாகாண மக்கள் ஏற்றே தீரவேண்டும் என்ற பாணியில்தான நடவடிக்கைகள் எடுத்துச் செல்லப் படுவுதை அவதானித்தோம்.

இதனை எவ்வாறு நாங்கள் கணிக கின் றோம் என்பதை அண்மையில் துரித மாகாண அபிவிருத்தி - முன்னேற்றத்தின் மார்க்கம் என்ற பொருளில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் கூட்டப்பட்ட தேசிய கருத்தரங்கத்தின் முன்னிலை யில் நான் பேசிய போது எடுத்தியம் பியிருக்கின்றேன்.

அதில் அரசாங்கத்தின் நலன் களுக்கு முரணற்ற முறையில் ஆனால மக்களுக்கு பயனுள்ள விதத்தில் எவ்வாறு முன் செல்ல முடியும் என்று குறிப்பிடும்போது பின்வரு மாறு கூறியிருந்தேன்.

அபிவிருத்தியின் போது, அனைவரையும் உள்ளடக்கக் கூடிய அர்ப்பணிப்பு நிறைந்த ஓர் அணுகுமுறை, பொது மக்களின் விசேட தேவை கள், சுதந்திரம் மற்றும் பாதுகாப்புத் தேவை களிடையே ஒரு சம நிலையைப் பேணிப் பாது காக்க வேண்டியமை போன்றவை இன்றிய மையாததாவன என்று ஆங்கிலத்தில் அமைந்த அப்பேச்சின் ஆங்கில, தமிழ், சிங்கள மொழிப் பிரதிகள் ஒரே கைநூலாக வெளியிடப்பட்டுள் ளன. அக்கை நூலின் பிரதியொன்றை இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

வடமாகாண சபையின் முதல் முதலமைச் சர் என்ற முறையில் வழங்கப்பட்ட அப்பேச்சு எமது வடமாகாண சபையின் கொள்கைக் கருத துக்களைப் பிரதிபலிப்பதால் அதனை வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட நட வடிக்கைக் குறிப்புக்களுடன் இணைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். 19 ஆம் பக்கம் பார்க்க....

**பீயோன் தேவை**

யாழ்.நகரிலுள்ள நிறுவனம் ஒன்றிற்கு பெண் சிற்றூழி யர் தேவை.

021 499 3501

(7215)

**பதவி வெற்றிடம்**

பாதுகாப்பு உத்தியோகத்தர் (SECURITY GUARD) வேலைக்கு அவசரமாக ஆட் கள் தேவை. கீழ்வரும் முகவரிக்கு சுய விபரக்கோவையை ஓகஸ்ட் 15ஆம் திக திக்கு முதல் அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு - 0212228025
TCT Multi Trade Centre
527. நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(C-8113)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org